# புனர்நிர்மாணம்

பரலோகத்தில் ஒரு வழக்கு அங்கு வழக்கறிஞர் குற்றவாளியை சீக்கிரமாய் விசாரணைக்குட்படுத்தி அவனை சீர்படுத்தி இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த இரத்தத்தினாலே நீதிமானாக்கி நம்மை பாவமர கழுவி சுத்திகரிக்கும் தேவனிடத்தில் உங்கள் பாவங்களை கொண்டு செல்லுங்கள்.

தேவன் இப்படியாக சிந்திக்கிறார். இந்த நபர் தவறு செய்தால் இவரது தவறை சீர்படுத்துவது எப்படி? சகலவற்றையும் எப்படி புனர்நிர்மாணம் செய்வது? சகல தவறுகளையும், இழந்து போன சகலவற்றையும் புனர்நிர்மாணத்திற்குள் கொண்டு செல்லும்படியாக தேவன் தொடர்ந்தேர்ச்சியாய் செயல்படுகிறவராய் இருக்கிறார். மனந்திரும்புதலுக்கூட்டாக நான் சிலுவை அண்டைக்கு கடந்து வரும் போது இயேசு கிறிஸ்து நமது பாவங்களை ஏற்றுக்கொள்கிறார். இனி நான் பாவி அல்ல என்கிறார். என் நிமித்தம் அவர் தண்டனையை அனுபவிக்கிறார். உடனடியாக எனது வெறுமை, பெருமை, எனது கீழ்படியாத நாட்களுக்காய் என்னை மீளவும் கட்டியெழுப்ப செயற்படுகிறார்.

**பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகம்**

(ரோமர் 5:20)

தேவனது கிருபை உடனடியாக கிடைக்கும், தாமதமில்லை. வேறொருவர் தவறு செய்தார் என நாம் நியாயம் தீர்த்து மன்னிப்பு கொடுக்க அதிக நேரம் செல்லும். இன்னொருவர் எமக்கு விரோதமாய் செயற்பட்டால் எம்மைக்காட்டிக் கொடுத்தால் அல்லது எமக்கு அபகீர்த்தி உண்டாக செயற்பட்டால் அப்படிபட்டவர்களை நாம் கிட்டிச் சேர்க்கத் தயங்கலாம். நமது தேவன் அப்படிபட்டவர் அல்ல. அவருக்கு அபகீர்த்தி உண்டாயிற்று, என்ற சிந்தனை அவருக்குள் இல்லை. அவர் உடன் மன்னிக்கிறவர். இழந்ததை பார்க்கிலும் அதிகமாய் ஈடு செய்வார். நாம் பாவத்திலும், அக்கிரமத்திலும் இருந்து மனம் திரும்பும் போது அவர் நமக்கு பெற்றுத் தருவது சாதாரண தீர்ப்பு அல்ல. அதி விஷேட பெறுமதிமிக்க பரிசை நமக்கு பெற்றுத்தருகிறார். இந்த உண்மையை நாம் விளங்கிக்-கொள்கின்ற போது நமது தரிசனம் வியாபிக்கப்படுகின்றது.

நமது உரிமை விசலாமாகும், எமது உரிமையின் எல்லைக்குள் அநேகருக்கு இளைப்பாறுதல் உண்டாகும். நீதி.23:07 எமது சிந்தனைகளின் எல்லையை அதிகரிக்க வேண்டும். அப்பொழுது அநேக தவறு செய்தவர்களை நாம் சீர்படுத்தி அவர்களை மீளவும் கட்டியெழுப்பலாம். சகலவற்றையும் சீர்படுத்திக் கொள்கின்ற துணையாளர்களை தேவன் தேடுகிறார். குப்பைத் தொட்டியில் இருப்பவர்களையும், விழுந்து விழுந்து எழுந்திருப்பவர்-களையும், தாழ்மையில் இருக்கும் எல்லாரையும் குறித்து தேவனுக்கு பாரிய திட்டம் ஒன்று அவரது நினைவில் உண்டு. சங்கீதம் 139:17

தேவன் படைத்த யாவருமே தவறுவது அவரது விருப்பமல்ல. ஏனெனில் சிருஷ்டிப்பே அவரது நோக்கம். சகலரையும் திருப்திப்படுத்தி அழகுப்படுத்துவது அவரது நோக்கமாகும். சாம்பலுக்கு பதிலாக சிங்காரத்தையும் கொடுப்பது அவரது திட்டமாகும். (ஏசாய 61:03) (சங்:90:17) ஆனந்த தைலம் அவரது வியாபரச்சின்னம். (ஏசா 61:3) எகிப்தில் அடிமைப்பட்டிருந்தவர்களுக்கு பாலும் தேனும் ஓடுகிற தேசத்திற்கு அழைத்துவருதல் (சங் 68:6) செழிப்பான இடம் "யாவே யட்சவ" (யாத் 20:1,2)

**புனர்நிர்மானம் சம்பந்தமாக 05 படிமுறைகள்.**

01. **புனர்வாழ்வு ::** மீளப்பெறுதல் (கடனை மீளப்பெறல், காணமல் போனதை கண்டறிதல்)
02. **புனரமைப்பு ::** சிதைவுற்றதை மீள கட்டுதல்.
03. **புனர்நிர்மாணம் ::** புதிதாய் சீரமைத்தல், (பழைய நிலைமைக்கு கொண்டு வருதல்)
04. **மேலதிக வெகுமதி ::** இளப்பீடு செய்தல்
05. **இயேசு கிறிஸ்துவோடு ஆளுகை செய்தல்.**
    புனர்நிர்மாணம் ஆரம்பிக்கப்படுவது மறுபடி பிறத்தலுக்கூடாக இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து மறுபடி பிறத்தலை ஏற்றுக்-கொள்கிறவர்களுக்கு மட்டும் புனர்நிர்மாணம் ஒரு தெய்வீக திட்டமாகும். இதைவிட மனிதனை நல்லவனாக மாற்ற வேறு வழிமுறை தேவனிடம் இல்லை.

ஒரு விசுவாசியினுடைய மற்றைய எல்லாவற்றையும் போல புனர்நிர்மாணத்தின் சகல காரியமும் நமக்குள் நிறைவேறுவது சிலுவைக்கூடாக மட்டுமே.

எபேசி:1:5 நாம் அவரது மகிமையின் புகழ்ச்சியாவோம்.

ஆதி1:1-3 ஒழுங்கின்மையும் வெறுமையுமான இடத்தில் தேவன் வெளிச்சம் உண்டாக்க கடவது என்றார்.

ரோமர் 3:23 எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமை-யற்றவர்களாகி

இருந்த போதிலும் தேவன் தமது நோக்கத்தை கைவிடவில்லை. அவரது அபிப்பிராயம் தோல்வியடைவதில்லை, மாற்றமடைவதில்லை, பெலவீனமடைந்துபோதிவல்லை. என்னைக் குறித்து தேவனது நினைவு விஷேசித்தமானது. ஆதி 1:26, 27 ஆதாமை சிருஷ்டித்ததினால் தேவ சாயலுக்கு பங்குள்ளவரானான்.

இயேசு கிறிஸ்து நமக்குள் வருவதினால் அவரது தெய்வீக சுபாவத்திற்கு பங்குள்ளவராகிறோம். தேவன் ஏதேன் தோட்டத்தை உண்டாக்கினார். தேவனது எதிர்பார்ப்பானது முழு உலகத்தையும் ஏதேனைப் போல் மாற்றுவதே. இப்பொழுதும் தேவன் எதிர்பார்ப்பது முழு உலகமும் மகிமையினால் நிரப்படுவதையே. இதை நிறைவேற்றுவது தேவனது ஒரே பெறான குமாரன் தேவசாயில் இருந்து அழிந்து போன அவரது சிருஷ்டிப்புக்குள் பிரவேசிக்கும் போதே. ரோமர் 8:18-20, எபி 2:10.

முதலாவதாக தேவன் வெளிச்சம் உண்டாகக் கடவது என

வார்த்தையை பிரயோகித்தார். லோகோஸ் என்ற வார்த்தையானவர் கடந்து வருகிறார். யோவான் 1:9 அதன் பின் நாங்களே அற்புதமும் அடையாளமும் ஏசாயா 8:18 மகிமையின் புத்தராகிய நாம் வெளிச்சத்தின் பிள்ளைகளாக பரிமாற்றம் அடைகிறோம்.

அதிகாலை என்னும் கர்ப்பபைக்குள் மகிமையின் புத்திரர் வெளிப்படுவார். அப் 3:4 எனவே பேதுரு சொன்னார். வெள்ளியும் பொன்னும் என்னிடம் இல்லை என்னை நோக்கிப் பார் என்றான் அப் 319-2 இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் சமீபமாகும் போது புனர்நிர்மாணம் வெகு சீக்கிரமாய் செயல்பட ஆரம்பிக்கும்.

சங்கீதம் 19:7 தேவனது வார்த்தை என்னை உயர்பிக்கும்.

சங்கீதம் 51:8-9 தேவனது ஆவி எம்மை புனர் நிர்மாணம் செய்கிறது.

ஆதி 1:2 ஆவியனவர் ஜலத்தின் மேல் அசைவாடுகிறார்.

சங் 23.3 தேவன் நமது ஆத்துமாவை தேற்றுகிறார்.

## புனர்வாழ்வு ழ1வது அத்தியாயம்

இதன் அர்த்தம் காயத்தை சுகப்படுத்துவதாகும், உள்ளார்ந்த சுகம் எனப்படும். உடைந்த உள்ளத்தை சுகப்படுத்துதலே சுவிசேஷத்தின் அடிப்படைக் கொள்கையாகும். எசாயா 61:3, லூக் 4:18 வழியருகே விழுந்து கிடந்த மனிதனை நல்ல சமாரியன் செய்த அதை கிரியை நமது வாழ்விலும் நிறைவேறும். தேவன் எமது வாழ்வை கடனிலிருந்து மீட்டுள்ளார். வாழ்வில் ஒரு எதிர்பார்ப்பு அக்கினியி சுட்டெரிக்கப்படுவதை சீர்ப்படுத்துதல், வழித்தவறிய எம்மை சீர்வழியில் இட்டுச் செல்லுதல், குருட்டு வாழிலிருந்து வெளிச்சத்திற்கும் மேலும் நாம் இனி முறுமுறுப்பதில்லை. குடும்ப ஜெபத்தை கட்டியெழுப்புதல், பரிசுத்தம், முறிந்து போன உறவை

சிர்படுத்தல் தீமையான செய்திகளை எதிர்பார்ப்போம் (என்னைப்பற்றியும் மற்றவர்களைப் பற்றியும்) உலகம் எதிர்பார்ப்பது சாபத்தை. பாதையில் பயணிக்க கூட பயம், எதை எடுத்தாலும் பயம், சந்தேகம் போன்ற உணர்வே.

முதலாவது படிமுறை எமது ஜீவியத்திற்கு மிகவும் அவசியம் ஏசாயா 61.

புனர்வாழ்வு என்பது இயேசு கிறிஸ்துவின் மாபெரும் தியாகத்தின், வல்லமையின் முதல் அனுபவமே. எமது கடன், பாவம், வியாதி, போன்றவற்றிலிருந்து பரிபூரண மீட்படைதல் ஆகும்.

மனிதனுடைய சுபாவம் மற்றவர் நமக்கு விரோதமாய் செயற்படும் போது, நாம் அவர்களை நியாயந்தீர்த்து அவர்களை மன்னிக்க அதிக நாள் செல்லும். அவர்களை கிட்டிச்சேர்க்க பலதரப்பட்ட நிபந்தனைகளை இடுகிறோம் ஆனாலும் சிலுவைக் கூடாக நமக்கு கிடைக்கும் முதல் படிமுறை புனர்வாழ்வு ஆகும்.

நான் :- நீதிபதியே! நான் குற்றவாளி

தேவன் :- அதை நான் அறிவேன்

நான் :- நீதிபதியே! இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் என்னை மன்னியும்.

தேவன் :- ஆம்! மன்னிக்கிறேன்.

வழக்கு முடிவடைந்து விட்டது குற்றவாளியாகிய நான் சுத்தவாளியானேன். அது மட்டுமன்றி தேவபிதாவானவர் பாவத்தின் நிமித்தம் எனக்கு ஏற்பட்ட இழப்பையும் ஈடு செய்கிறார்.

இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி இதுவே சிலுவையின் இரட்சிப்பு இதுவே.

01. உடைந்த உள்ளமுடையோருக்கு சுகம்
02. அடிமைக்கு விடுதலை
03. சிறைப்பட்டவருக்கு மீட்பு
04. வேதனைப்பட்டவருக்கு ஆறுதல்

## புனரமைப்பு ழ02வது அத்தியாயம்

புனரமைத்தல் என்பது சிதைந்து போன அஸ்திபாரம் மற்றும் சுவர் என்பன, மீண்டும் கட்டியெழுப்புதல் ஆகும். சாமுவேல் 30 தாவீது சிக்லாகுவில் சகலத்தையும் இழந்து போனான். ஆனாலும் மீண்டும் சீரமைத்தான். சிக்லாகு விசுவாசியின் வாழ்க்கையில் விபத்துக்களை எதிர்பார்ப்பதாகும்.

இப்படிபட்டவர்களின் வாழ்வு மீளவும் கட்டப்பட வேண்டியதே. பாவத்தின் நிமிர்த்தம் மனிதனின் உள்ளான ஜீவியம் மட்டுமின்றி அவனது சகல உறவுகளும் சிதைந்து போய்விடுகிறது. குழப்பமான சூழ்நிலையாகி விடுகிறது. புனரமைப்பு என்பது புனர்நிர்மானத்தின் இரண்டாம் படிமுறை. இதினிமித்தம் அவனது வாழ்வு தேவனது எதிர்பார்ப்பின் அடிப்படையில் பரிமாற்றம் அடைகிறது. சிதைந்து போன அஸ்திபாரம் மீளக்கட்டுப்படுதல் ஆகும்.

இதற்கு மிகவும் நல்ல உதாரணம் நெகேமியாவின் கதாபாத்திரமே. அவன் எருசலேமை கட்டியெழுப்ப இராஜவின் அனுமதியை பெற்று தேவனது கிருபையோடு கடந்து சென்றார். ஏசாயா 61:4-5, நெகேமியா 4-2.

பாவத்திற்கு உந்துவிக்கப்படும் எமது ஜீவியத்தின் அஸ்திபாரம், வாழ வேண்டிய வழிமுறைகள் கூட சிதைவுண்டு போனது. அப்படிபட்டவர்களின் ஜீவியம் மீளவும் கட்டப்பட வேண்டும்.
உதாரணம் :- குஷ்டரோகி சுகமடைதல்.

அவனது கை, கால்கள் விகாரமடைந்து அவன் சமுதாயத்தால் ஒதுக்கப்படுகிறான். ஆனாலும் இயேசு கிறிஸ்து

குஷ்டரோகியை சுகமாக்கிய பின் அடையாளம் கூட மாற்றப்படுகிறது. பாளயத்திற்கு புறம்பே இருந்து, மீண்டும் வெளியே வந்து, மீண்டும் சமுதாயத்தோடு ஒன்றினைக்கப்படுகின்றான். சமுதாயம் அவனை ஏற்றுக்கொள்கிறது.

நாகமானின் குஷ்டம் சுகமாக்கப்பட்டு அவன் மறுபடியும் புதிய சரீரமாக புதுப்பிக்கப்பாட்டான்.

மனிதனின் சிதைவுற்ற வாழ்வு, கற்பாறை மேல் உள்ள நிலத்தை போல், பள்ளத்தாக்கின் நிலத்தை மீண்டும் நிரப்ப முடியும். அனாலும் பாழடைந்த வாழ்வை சீா்படுத்துதல் புனரமைத்தல் ஆகும். உடைந்த நொறுங்குண்ட வாழ்வு மீளகட்டுதல் புனரமைப்பு ஆகும். ஏசாய61:4.

வேறு மாற்றுவழி இல்லை




**புனர் நிர்மானம் : புதிதாய் நியமிக்கப்படுதல்.**

**ழீ 03வது அத்தியாயம்**

இழந்து போனதொன்றை மீளவும் கட்டியெழுப்புதல் புனர்நிர்மாணமாகும்.

இதன் அர்த்தம் என்னவெனில் இழந்துபோன அடையாளம் மற்றும் வாழ்வு உரிய இடத்திற்கு உயர்த்தப்படுதல். தெய்வீக, புத்திர பாக்கியத்திற்குள் பிரவேசித்தல், பார்வோனின் பாண பாத்திரக்காரணாய் ஆகுதல். இழந்த பதவிக்கு யோசேப்பு நியமிக்கப்படுதல், சகேயு மறுபடி ஆபிரகாமின் மகனாகுதல், அப் 3:22. மோசே பிதாக்களை நோக்கி உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னை போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார். அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவி கொடுப்பீா்களக.

நீதி செய்தல், சமாதானப்படுத்தல், பரிசுத்தப்படுத்துதல், மீட்பு, புதிதாக ஏற்றுக்கொள்ளப்படுதல் போலவே சிலுவையின் பலிக் கூடாக இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுதலினால் உண்டாகும் பலன் புனர்நிர்மாணத்தின் படிமுறை எனப்படும்.

கீழ்படியாத மகன் மறுபடி தகப்பன் வீட்டிற்கு திரும்புதல், பானபாத்திரக்காரன் மறுபடி பனபாத்திரக்காரனாய் நியமிக்கப்படுதல் அவன் அடிமை என்றபடியினால் அடிமையாகுதல். ஆனாலும் யோசேப்பு புத்திரன் என்றபடியினால் இராஜாவாய் நியமிக்கப்பட்டான்.

நாம் இயேசு கிறிஸ்துவின் சாயலுக்குள் திருப்தியடைய வேண்டும். தேவ புத்திரா் என்ற பாக்கியத்தை தவிர வேறு இலாபங்களை நாடி ஓடாதிருப்போம். நாம் தேவனை அறிந்தவர்களாய் மட்டுமன்றி மற்றவர்களுக்கும் அறிவிப்பதாகும். தேவனை மற்றவா்களுக்கும் அறிவிப்பதை இலாபமாக கருதவேண்டும். தேவனை அறிந்ததினால் ஏற்படும் உயா்வு மற்றைய வசதி வாய்ப்புகளை விட உயா்வானதாகும் எனவே இந்த தேவனை அறிந்த உலகில்

நம்மால் பெரிய காரியங்களை நிறைவேற்ற முடியும். தேவனைவிட்டு அவா் கொடுத்த ஆசிர்வாதத்தின் பின்னால் செல்வோமேயானால் என்னால் எதுவும் செய்ய முடியாது.

2கொரிந்தியா் 4:7 தேவனை அறிதல் என்ற போக்கிஷத்தை மட்பாண்டங்களின் பெற்றிருக்கிறோம்.

**இளப்பீடு சகிதம் புனர்நிர்மாணம்**

**ழீ 4வது அத்தியாயம்**

பிசாசின் வஞ்சகத்திற்கு அகப்பட்ட யோபு இறுதியில் இரட்டிப்பான ஆசிர்வாதத்தை அடைந்தான். நேசமுள்ள புத்திரனாய் இருந்து சிறைக்கு சென்ற யோசேப்பு எகிப்தில் இராஜாவின் பிரதானியானான். பழைய ஏற்பாட்டில் குற்ற நிவாரணப்பலியில் இழப்புக்கு பதிலாக 20% விதம் மேலதிகமாக புனர்நிமாணம் செய்யப்பட வேண்டும்.

சங்கீதம். 34:8 கர்த்தரை ருசித்துப்பார்க்கும் அனுபவத்திற்குள்ளாய் நாள்தோறும் கடந்துசெல்ல வேண்டும்.

ஏசாயா 61:3 சாம்பலுக்கு பதிலாக சிங்காரம். ஆனந்த தைலத்தினால் தேவன் நாள் தோறும் எமது தலையை அபிஷேகம் செய்கிறாா். குற்ற நிவாரணப் பலி 20% ல் அதிகரிக்கும்.

யாத்திரகாமம் 22:1 ஒரு மாட்டு பதிலாக ஐந்து மாடும் ஒரு ஆட்டுக்கு பதிலாக நான்கு ஆடுகளும் செலுத்தப்பட வேண்டும்.

லூக்கா 19:8 சகேயு அநீதியாய் பெற்றதை நான்கு மடங்கு திருப்பி செலுத்தினான்

மத். 13 இல் விதைக்கப்படுபவனின் உவமையில் விதைக்கப்பட்ட விதை, பட்சிக்க வந்த பறவைகளைத் துரத்தி முள் அகற்றி, கல் அகற்றி, பண்படுத்தப்பட்ட நிலமாய் மாறியது.

எல்லாவற்றையும் விட்டு விட்டு என் பின்னே வருபவனுக்கு நூறுவீத ஆசிர்வாதம் உண்டு மத்.19:28-29.

சங்கீதம் 105:19 தேவனுடைய வாக்குதத்தம் நிறைவேற காலமுண்டு.

உதாரணம் யோசேப்பு, யோபு, எலிஷாவின் காலத்தில் இருந்த விதவைகள், எஸ்தர், மொர்தகாய், நயோமி, ரூத், யாக்கோபு, மெபிபொஷத்.

## இயேசு கிறிஸ்துவோடு இராஜரீகம் பண்ணுதல் மற்றும் புனர்நிர்மாணிப்பவரின் அபிஷேகம்

## ௦5வது அத்தியாயம்

உதாரணம் :- யோசெப்பு, தாவீது

தாவிது இராஜா :-

01. நடுக்கத்தோடு பயத்தோடு இருந்த இஸ்ரவேலரை துணிகரமுள்ளவராய் கொண்டுவருதல்.
02. அவர்களது விசுவாசத்தை புனர்நிர்மாணம் செய்தல்.
03. இஸ்ரவேலுக்கு தெய்வீக பாதுகாப்பை கொண்டு வருதல்.
04. ஊரீம் தும்மீம் மீண்டும் புனர்நிர்மாணம் செய்யப்படுதல்.
05. மீண்டும் ஜனங்கள் தேவ சத்தத்தை கேட்டனர். சங் 89:10
06. செய்யும் வேலையை திறம்பட செய்யக் கற்றுக்கொடுத்தல்.
07. பெலஸ்தியரால் களவாடப்பட்ட பட்டணம் மீளவும் பெற்றனர்.
08. லேவி கோத்திரம் மீண்டும் புனர்நிர்மாணம் அடைதல்.
09. தேவனை ஆராதனை செய்ய மீண்டும் ஏற்படுத்தி உடன் படிக்கை பெட்டியை கொண்டுவருதல்.
10. நட்பின் ஊடாக விசுவாத்தை புனர்நிர்மாணம் செய்தல். (யோனத்தன் பெத்தகேமின் கிணற்றில் தண்ணீர் கொண்டு வருதல்
11. ஜனங்களை விருப்பத்தோடு தங்களை அர்பணித்தனர்.
12. தாவீது தனது இராஜ்ஜிய காலத்தை அறிந்தபடியினால் தெய்வீக உறவோடு ஜெயம் பெற்றமை.
13. பலதரப்பட்ட சம்பவங்களுக்கூடாக புனர்நிர்மாணம் செய்தல்.
14. 400 ஆண்டுகளாக தேவன் இஸ்ரவேல் ஜனங்களோடு பேசாவிட்டாலும் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு வரை இராஜரீக விதையை பெற்றுக் கொடுத்தல்.
15. தேவனை நோக்கி செல்ல கற்றுக்கொடுத்தல்.
16. தெய்வீக அழைப்பு மற்றும் வரங்களை புனர் நிர்மாணம் செய்தல். ஏசாயா 61.

தேவன் ஏதேன் தோட்டத்தை உண்டாக்கி ஆதாமிடம் ஒப்படைத்ததன் நோக்கம் முழு உலகத்தையும் ஏதோனைப் போல மாற்றும் நோக்கத்தொடயேயாகும்.

ஆதி 1:26, 27, 28 ஆனால் அவர் எதிர்பார்ப்பை சிதைவுறப் பண்ணினபடியால் ஆதாமை விட பெறுமதி மிக்க ஒரு பொக்கிஷமாகிய தம்முடைய ஒரே பொரானவரை இப்பூமிக்கு அனுப்பினார்.

தேவனது எதிர்பார்ப்பு முழு உலகமும் அவரது மகிமையால் நிரப்படுவதே ஆகும். இது நிறைவேற்றப்படுவது மகிமையின் தேவகுமாரன் தெய்வீக சயலோடு அழிந்து போன சிருஷ்டிப்புக்குள் வெளிப்படும் போதே. ரோமர் 8:16-19, எபி 2:10.

நாம் மேலும் ஏன் பாவத்தில் தவிப்பது? எமது ஜீவிய காலத்தில் எம்மால் ஏற்பட்ட தவறுக்காக அவர் பாதத்தண்டை சென்று, எமது பாவத்தை ஏற்றுக்கொண்டு மனம் திரும்பும் பட்சத்தில் எனது ஜீவியத்திற்குள் பாவத்தில் இருந்து மீட்பை மட்டுமன்றி எமது பாவத்தின் நிமித்தம் இழந்து போன வருடங்களுக்காக இழப்பீட்டை எமது வாழ்வில் கூட்டித்தருவது அதிக நிச்சயம்.

### இரண்டு இல்லங்களின் கதை.

நாம் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருப்பது புனர்நிர்மாணம் சம்பந்தமாகவே. இக்கதை ஆரம்பிப்பது பரலோக வீட்டிலிருந்தே அங்கு பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவர் ஒன்றாய் உலாவுகின்றார்கள். அந்த சாயலிலேயே தேவன் பூமியில் வீட்டை உண்டாக்கினார். தாய் தந்தை பிள்ளைகள் என்றும் தமது சயாலாண பெற்றோருக்கூடாக தமது சயலாக மனித வர்க்கத்தை கட்டியெழுப்புவதே தேவனுடைய திட்டம். தேவன் மனிதனை தேவ தூதரிலும் சற்று சிறியவனாகவே சிருஷ்டித்தார். சங் 8:5.

இருந்த போதிலும் தேவனது திட்டமானது அவரது சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் தேவனது பூரணத்துவத்துக்குள் படிப்படியாய் வளர்ச்சியடைவதே. ஜீவவிருட்சகத்தின் கனியை புசிப்பதே, தெய்வீக சாயலுக்கு பூரணப்படுத்துவதற்கான சிறந்த வழி, மனிதன் கீழ்படியாமல் போனாலும் தேவனது திட்டத்தில் மாற்றம் ஏற்படவில்லை. உலக சிருஷ்டிப்புக்கு முன்பே நியமிக்கப்பட்டதே, இயேசு கிறிஸ்து மாம்சமாகி பூமிக்கு வருவதும் உயிர்த்தெழுதலுக்கூடாக தெய்வீக பரம்பரையை பூமியில் சீக்கிரம் ஆரம்பிப்பதாகும். சிலுவை மரணம் மனிதன் பாவத்திலிருந்து மீட்படைய மட்டுமல்ல முழு சிருஷ்டிப்பும் இருந்ததைப் பார்க்கிலும் இயேசுகிறிஸ்துவின் பலிக்குடாக நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளவே. இயேசு கிறிஸ்து பெரிதான இரகசியமும் இதுவே.

எல்லோரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களாகி ரோமர் 3:23

பூமிக்குரிய தகப்பனின் இல்லம் பாவத்தினால் தெய்வீக சாயலில் இருந்து விலகி போய்விட்டது. இதிலிருந்து பாசமிகு பிள்ளைகள் கைவிடப்பட்டனர். பிதாவின் இல்லத்தை விட எமது ஜீவிய காலத்தில் வேறு இல்லங்களையும் நாம் சந்திக்க நேரிடும்.

01. பிதாவின் இல்லம்
02. பாடசாலை :- கல்வி மற்றும் விளையாட்டு
03. தொழில்
04. நண்பர் உறவினர்
05. திருமணம்.

எமது பிதாவின் வீட்டில் ஏற்பட்ட காயமானது மேற்குறிப்பிட்ட இடங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். நல்ல தகப்பனுடைய பாதுகாப்பில் இருந்தவர்கள் கூட பிற்காலத்தில் எதிர்பார்ப்புகள் அற்ற அநாதைகளாக்கப்பட்டுள்ளனர்.

ஆவிக்குரிய அநாதைகளாக்கப்பட்ட நிலையில் அடையாளமாவது. எங்கே போவது? என்ற நிலை பாதுகாப்பற்ற சூழ்நிலை. நான் யார்? எனது பெறுமதி என்ன? நான் யாருக்கு சொந்தம்? என்னைக் குறித்து கரிசனை உள்ளவர் யார்? எமது பெறுமதி எந்த பூமிக்குரிய பிரயாணத்தில் காயப்பட்டு கைவிடப்பட்டது? இருந்த போதிலும் மனிதனின் முக்கிய பிரச்சினை என்னவெனில் அன்பின் ஜீவ ஊற்றாகிய தேவனை விட்டு விலகியதே. நாம் பதினெட்டு வயதில் உலக போராட்டத்தில் முகங்கொடுத்து பெற்றேரது அன்பிற்குள் பாதுகாக்கப்படுவோமாகில் எமது காயம் ஆற்றப்படும். சீக்கிரம் சுகமடைவோம்.

**அநாதை**

ஆதி 3:17 பின்பு அவர் ஆதாமை நோக்கி, நீ மனைவியின் வார்த்தைக்கு செவி கொடுத்து புசிக்க வேண்டாமென்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியை புசித்த படியினால் பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும். நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதன் பலனை புசிப்பாய்.

ஒரு அநாதையின் எதிர்பார்ப்பு அதிகமான அன்பு! எனவே அப்படிப்பட்டவர் யாரிடமாவது கிட்டிச்சேர முற்படுவார். அவர் தமது கைவிடப்பட்ட நிலையை மூடிக்கொள்ள, இன்னொருவரிடத்தில் அடைக்களம் புக முயற்சிப்பார். அப்படியே மற்றவர்களை மகிழ்விக்கவும் முயற்சிப்பார்.

அநாதைக்கு உலகத்தார் அளிக்ககூடிய பெறுமதி ஒன்றும் கிடையாது. யாருமே அவரிடம் கிட்டிச்சேருவது இல்லை, என்ற கடின உள்ளம். குடும்பத்தினர் ஏனையவர்களை நேசிக்கின்றார். தன்னை நேசிப்பது இல்லை என்ற ஆதங்கம், குடும்பத்தில் ஏற்படுகின்ற பலதரப்பட்ட அனுபவங்களினால் ஏற்பட்ட சோர்வு, இதனால் தான் ஒரு அநாதை என்ற உறுதியான மனப்பான்மை என்பதினால் ஏற்படும் தாக்கம், இந்த அநாதையான நிலை பூமிக்குரிய இல்லத்தில் கிடைத்த மாபெரும் வீழ்ச்சியாகும்.

**அநாதை சேவகனாகுதல்.**

அநாதையாக்கப்பட்ட பின் தாம் வருமானத்திற்கு ஒரு வழிமை ஏற்படுத்த வேண்டும் என்ற உணர்வு ஏற்படுகிறது. பிதாவின் வீட்டில் குறைவின்றி வாழவேண்டிய மகனின் வாழ்வு முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய் என்ற வார்த்தை தெளிவாகிறது.

மகன் எதிர்பார்க்கும் வருமானம் என்ன? நான் வகுப்பில் முதலாம் பிள்ளையானால் என் அப்பா என் மீது அதிகம் பாசம், சேவகத்தன்மை தகப்பன் வீட்டிலேயே ஆரம்பிக்கலாம். ஏழைகள் தங்கள் வருமானத்திற்காக பிள்ளைகளை வீட்டு வேலைகளுக்கு அனுப்புவது உண்டு. இது ஒரு வேதனை நிறைந்த உண்மையாகும். நான் ஒரு சேவகன் என நிருபிக்கும்படியான தலைப்பின் கீழ் வேலைத் திட்டங்களில் சுய மகிமையை தேடுகிறார்கள். இரட்சிக்கப்பட்ட பின்னும் அநேக கிறிஸ்தவர்கள் இப்படியே வாழ்கிறார்கள்.

இது நிமித்தம் சபைக்குள்ளும் மகனாக அல்ல சேவகனாக செயல்படுவார்கள். அநேகம் சேவகத்தன்மைக்கு பழக்கப்பட்ட பின் தேவனிடத்திலிருந்து நன்மைகளை பெறுவதற்காகப் அதிகம் வேலை செய்ய வேண்டும் என்று, பக்திமான்கள் கற்றுக் கொடுப்பர். என்னுடைய இரச்சிப்புக்காய் நானே செயல்பட வேண்டும் என உற்சாகத்துடன் தான தர்மங்களில் ஈடுபடுவர், அநேகர் இயேசு கிறிஸ்துவை தேடி மறுபடி சேவகனாக தமது நீதியின் கிரியையை நிருபிக்கின்றனர். நீதிமா விசுவாசத்தில் பிழைப்பான். விசுவாசமே எமது நீதி.

இயேசு கிறிஸ்துவை தமது இருதயத்தில் ஏற்றுக் கொண்ட உடன் சேவகன் மகனாகிறான். அப்பொழுது நாம் ஆவியானவரின் துணை கொண்டு தேவனை “அப்பா பிதாவே” என்றழைக்கிறோம். கலாத்தியர் 4:6 ரோமர் 8:14,15

தேவன் தாம் திட்டமிட்ட தேசத்தை கூட மகனாக மகளாகவே ஏற்றுக்கொண்டுள்ளார். ஏரேமி 31:20

எசேக்கியல் 6:3-6 இஸ்ரவேலின் பர்வதங்களே கர்த்தராகிய ஆண்டவரின் வார்த்தையை கேளுங்கள் கர்த்தராகிய ஆண்டவர் பர்வதங்களையும் குன்றுகளையும் ஓடைகளையும் பள்ளத்தாக்குகளையும் நோக்கி இதோ உங்கள் மேல் நான், நானே பட்டயத்தை வரப்பண்ணி உங்கள் மேடைகளை அழித்து போடுவேன். உங்கள் பலிபீடங்கள் பாழாக்கப்பட்டு உங்கள் சிலைகள் தகர்க்கப்படும் உங்களில் கொலையுண்டவர்களை உங்கள் நரகலான விக்கிரங்களுக்கு முன்பாக விழப்பண்ணுவேன். நான் இஸ்ரவேல் புத்திரருடைய பிரேதங்களை அவர்களுடைய நரகலான விக்கிரங்களின் முன்னே கிடக்கப்பண்ணி உங்கள் எலுப்புகளைச் சிதறப்பண்ணுவேன்.

உங்கள் பலிபீடங்கள் நிர்மூலமும் பாழுமாகும்படிக்கும் உங்கள் நகரங்களான விக்கிரங்கள் தகர்க்கப்பட்டு ஓய்ந்து உங்கள் சிலைகள் வெட்டுண்டு, உங்கள் கிரியைகள் குலைந்து போகும்படிக்கும், உங்களுடைய சகல வாசஸ்தலங்களிலுமுள்ள பட்டணங்கள் நிர் மூலமும் உங்கள் மேடைகள் பாழுமாகும்.

**இலங்கைப் புத்திரன்**

2003ஆம் ஆண்டு நான் ஒரு தரிசனத்தைக் கண்டேன் இலங்கை வரைபடத்தில் யாழ்ப்பான தீவு தலையாக மாறியது மன்னாரிலும் திருகோண மலையிலும் இரண்டு கைகள் உண்டானது களுத்துரையிலும் பொத்துவில் பகுதியிலிருந்தும் கால்கள் இரண்டு உண்டானது அப்பொழுது இலங்கை எனும் நிலத்தில் அடித்து

கொண்டது. பிள்ளையின் கைகால்கள் காயப்பட்டு முற்கம்பிகளால் கட்டப்பட்டிருந்தது.

இச் சிறு கைநூலை 2006 மார்கழி முதலாம் திகதி எழுதிக் கொண்டிருக்கும் போது இலங்கைகை நிலமை அப்படியே இருந்த போதிலும் இலங்கைப் புத்திரன் சீக்கிரம் தேவனுடைய மடியில் ஆறுதல் அடைவார். என

நாம் தீர்க்க தரிசனங்களைப் பெற்றோம். தீர்க்க தரிசனமாய் தேவன் தேசத்தை குறிப்பிடுவது தமது பிள்ளையாக அநேக தவறுகள் பாவங்கள் செய்யும் பட்சத்தில் தேவன் சிட்சிப்பது அன்பின் நிமிர்த்தமே.

சீயோன் இராஜாவின் சிங்காசனத்தை ஏற்றுக் கொண்ட குடும்பமாய் மாற்றும் போது “என்னைக் கேளும் அப்பொழுது ஜாதிகளை உமக்குச் தந்தரமாக கொடுப்பேன்” (சங் 2:8) இப்படியாக நாம் தேசத்தை குறித்து சிந்திப்போம்.

**துன்புருத்தல்**

அநாதை மற்றும் அடிமையைப் போல் வாழ்வது போன்ற அனுபவம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள முன் எல்லோருக்கும் ஏற்படுவதாகும். முதலாவது அநாதை என்பது தமது பெற்றோரை இனங்காணாமையினால் ஏற்படும் அநாதை நிலை. இருந்த போதிலும் அதைவிட மேலாக குணாதிசியத்தில் குற்றப்பட வேண்டி நேரிடும் அவர்கள் தனிப்பட்ட ரீதியில் காயப் பட்டவர்களாகவே காணப்படுவர்.

திருடன் திருடவும் கொல்லவும் வருகிறான் (யோவான் 10:10) இந் நிலைக்கு காரணம் தகப்பனின் மது அடிமையின் நிமித்தம் ஏற்படுகிற தரித்திரம். பெற்றோர் காணமல் போதல், பயம், சுபாவரீதியில் தாக்கங்களுக்கு அகப்படுதல், இப்படியான உபத்திரவங்களுக்கு முகம் கொடுத்தவர், சிதல் வைத்த புன்னைப் போல் வாழ வேண்டிய நிலை ஏற்படும். இப்படி பட்டவர்களுக்கே புனர்நிர்மாணம் அவசியமாகிறது. இப்படியாக

துன்புருத்தலுக்குட்பட்டவர்கள் தாங்கள் துன்புருத்தப்படும் போதே மற்றவர்களையும் துன்புருந்த முயற்சிப்பார்.

**அடிமை**

பூமிக்குரிய வாழ்வில் நமக்கு ஏற்படுகிற பாவத்தின் நிமிர்த்தம் சிந்தனையில் கூட விடுதலை இல்லாமல் அடிமைகளாக்கப்படுகிறோம். அப்படிப்பட்டவர்களின் தீர்மாணம் மற்றவர்களுக்கு அடிமைப்பட்டிருக்கும் அநேகர் மது போதைக்கு அடிமைப்பட்டிருக்கின்றனர். ஒரு சிலர் மேலும் பாவ இச்சைகளுக்கு அடிமைப்பட்டு தாமே விடுதலையடைய முடியாத கண்ணிக்கு அகப்பட்டுவிடுகின்றனர்.
சங் 107:10-16

இயேசு கிறிஸ்து அவர்களை விடுதலை பண்ணினார் லூக்கா 4:18 இப்படி அவர் செய்தது அவரே மீட்பின் கிரயமான படியினால்.

இந்நிலையில் இந்நபருக்கு விடுதலை இல்லாமல் போய்விடும், சிந்திக்கும் சுகந்திரம் இல்லாமல் போய்விடும், எதிர்பார்பற்ற வாழ்வு சேவகன் தொழில் ரீதியில் முன்னேற்றமடைந்து மற்றவர்களை தோற்கடிக்க பிரயர்த்தனம் செய்வான்.

அடிமையானவன் அப்படிப்பட்ட முயற்சிகளில் ஈடுபட மாட்டான் அவன் பந்தையத்தில் வெற்றிகம்பத்தை நோக்கி ஓடாமல் போட்டியிலிருந்து இராஜிநாமா செய்தவனே கடந்த காலங்களில் ஏற்பட்ட தோல்வியின் நிமிர்த்தம் எழுந்து நிற்க முடியாதவன் அவன் தோளின் மீது சுமை சுமத்தப்பட்டுள்ளது. அந்த நுகமானது எனது தோல்வி எனது முடியாமை என்பான் அவன் தலை கவிழ்ந்து அவன் காண்பது நிலத்தையும் பின்புரத்தையும் மட்டுமே, அவன் வாழ்வின் சுபாவமனது நுகத்தடிக்கு கட்டப்பட்ட எருதைப்போல அவன் எதிர்பார்ப்பது வையிற்றுக்கு ஆகாரம் மட்டுமே, மரத்தில் கட்டப்பட்ட மாட்டைப் போல கயிற்றீன் நீலம் உள்ள வரை ஒரே இடத்தில்லேயே சுற்றிக் கொண்டிருக்கும்?

01. எஜமானின் கட்டளை இடப்பட்ட வேலைகளை நிறைவேற்ற கட்டப்பட்டவன்.

02. எஜமானின் பாதங்களின் கீழ் இருப்பவன்.

03. அற்பமான காரியத்திற்காய் வாழ்வை பணயம் வைப்பவன்.

04. கண்ணீரே அவனது உரிமை.

05. சுகந்திரமான சிந்தனையற்றவன்.

06. எதிர்பார்பற்றவன்.

07. பஞ்சத்தை போக்கவே போராடுபவன்.

08. வாழ்வில் அர்த்தமற்றவர்.

09. உறவுகளின்றி தனிமையாக்கப்பட்டவன்.

10. இரவு பகலேன பிரயாசப்படுவன். (ஓய்வின்றி).

11. முன் வாசலை விட்டு பின் வாசலை உரிமையாக்கிக் கொண்டவன்.

12. வாழ்வு ஓரெ இடமாய் பற்றிக் கொண்டிருக்கும் (மரத்தில் கட்டப்பட்ட மாட்டைப் போல்)

13. துக்கம் நிறைந்த மரணமே உரிமை.

மேற்கொண்ட காரியங்களை சிந்திக்கும் போது ஒரு அடிமையின் அனுபவம் எப்படிப்பட்டது என தெளிவாகிறது இருந்த போதிலும் அடிமைக்கு மீட்பு உண்டு அது தேவ அன்பிலேயே கிடைக்கும்.

தேவ அன்பு எம்மீது கிட்டிச்சேரும் போது அடிமையின் கட்டுக்கள் அறுந்து பழைய நிலை அழிந்து உன்னத குமாரன் என்ற நிலைமைக்குள் கடந்து வருவோம். இது பரலோக பிதாவினால் தமது பிள்ளைகளுக்கு பெற்றுத் தரும் புனர்நிர்மாணம் ஆகும் இனி காயம் இல்லை, வேதனை இல்லை, தேவ அன்பை

பெற்ற நாம் கிளி அடிமைஇல்லை, இனி நாம் தேவ பிதாவின் மகனும் மகளும் ஆனோம்.

இது சம்பந்தமாக நமக்கு எகிப்தில் இஸ்ரவேலரின் அடிமைத்தனம் சிறந்த பாடத்தை புகட்டுகிறது அடிமைத்தனத்திற்கு காரணம் பாவம் அதிகரிக்கப்பட்மையே. மது போதை தீயபழக்கவழக்கம் சர்வாதீகார ஆட்சிக்கு கீழ் சிறைப்பிடிக்கப்படல், தொழில் ரீதியான அடிமை, இச்சைக்கு அடிமை, பணம் சம்பாதிக்க அடிமைத்தனம், ஆனாலும் இயேசு கிறிஸ்து வந்தது அடிமைகளை விடுதலையாகவே. லூக் 4:18

**கலக்காரன்.**

இப்படிப்பட்டவர்கள் பற்றி பூமியில் தகப்பன் மற்று ஏனைய அதிகாரங்களுக்கு எதிராக கலகம் உண்டாக்குவார். கோபமடைவார் மார்க்ஷீச கொள்கையை தெரிவு செய்பவர் எபேசி 4:8

கலகக்காரர் வல்லமையை இடைக் கட்டினவர்கள் சங்65:6

கைவிடப்பட்ட இஸ்மவேலைப்பார்த்து தேவன் இப்படிச் சொல்கிறார். இவன் கரம் சகோதரனுக்கு விரோதமாகவும் சகோதர்களின் கரம் அவனுக்கு விரோதமாகவும் இருக்கும். வாழ்க்கை முழுவதும் உபத்திரவதிற்கு உட்பட்டடியானால் அவன் நாள் முழுதும் நளிந்து போன வாழ்க்கையாகி விட்டது. இது நிமிர்த்தம் அவன் சமுதாயத்திற்கு நல்ல பாட்த்தை கற்பிக்க முற்படுவான். இதற்காய் தன் சுய நம்பிக்கையை பயன்படுத்துவான். துன்புறுத்துவோரை விழத்தள்ள முற்படுவான். அங்கு ஒரு தனி

நபர் கிரியை நிறைவேறும் அவன் வாழ்வில் வேகம் உற்சாகம் இருக்கும் இது நிமிர்த்தம் ஒரு குறுந்தாடியோடு மார்க்ஷீச சிந்தனை கொண்ட அரசியல் வாதியாக காணப்படுவான்.

நற்செய்தி என்னவெனில் :- கலக்கக்காரருக்குக் கூட கொடுப்பதற்கு தேவனிடம் வரங்கள் உண்டு.

நீர் மேலே ஏறிச்சென்று போது நீர் சிறைப்பிடித்தவர்களை பரிவாரமாக உம்மோடு அழைத்து சென்றீர். மனிதரிடமிருந்தும், கலகக்காரரிடமிருந்தும் நீர் கொடைகளை பெற்றுக்கொண்டீர். இறைவனாகிய கர்த்தரின் வதிவிடம் அதுவே (சங் 68‘18 (இலகு தமிழ் மொ/பெ)

**தேவன் இல்லாத பள்ளதாக்கு**

பிரியமான பிள்ளையாய் பூமிக்குரிய வீட்டில் வாசம் பண்ணும் படி தேவன் ஜெனிப்பித்து ஒரு குடும்பத்திற்குள் வைத்த போதும் அவனது அந்த அனுபவத்தோடு ஏதோ ஒரு வழியாய் அழிவுக்கு கடந்து செல்கிறான். அதிகமாக அழிவில் வீழ்ந்துவிடாதபடி தேவகரம் அவனை உயர்த்தும் போது அதிகம் காயப்படாமலும் இரட்சிப்பின் அனுபவத்தோடு சீக்கிரம் புனர் நிர்மானம் அடையலாம் பெரும் பள்ளத்தாக்கில் வீழ்ந்த மனுஷனை உயர்த்தும் படி படைக்கப்பட்ட எல்லா மனுஷர்க்குள்ளும் ஞான அறிவு உள்ள படியினால் பாவ

சூழ்நிலையில் தேவன் தமது கரத்தை நீட்டுவாராக அநேக முறை தேவன் இருதயத்திற்கு தப்பி மனுஷனை அழிவில் இருந்து மீட்கும் படி தொடர்ந்தேர்ச்சியாய் செயல்படுகிறார். (யோபு 33:14-18)

இதுவும் மிகவும் தாழ்வான இடம் இதை ஒரு குப்பையாய் அறிமுகப்படுத்தலாம் லூக்கா 1:52,53, 1சாமு 2:8

துணியினால் பாதங்கள் கட்டப்பட்டு இருப்பது எப்படியோ அப்படியே இருதயமும் எவருமே கிட்டிச்சேர முடியாத படி கற்குகையாக இருக்கும். எவராலும் வாசிக்க முடியாத அபூர்வமான எழுத்துக்கள் வாசற்படியில் எழுதி, பெரும் கற்பாறை ஒன்றினால் வாசல் அடைக்கப்பட்டுள்ளது.

மரண உபத்திரவத்திற்கு முகங்கொடுக்கும் ஒருவன் இறுதி மூச்சோடு குகையில் இருக்கின்றான். ரோம இராவனுவத்தினர் என் பிசாசின் சேவைகள் இருதயத்தை காவால் காத்துக் கொண்டிருக்க அப்படி பட்ட நிலையிலும் இந்த மனுஷனை மீட்க மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்த இயேசு கிட்டிச் சேருகிறார்.

தேவன் பள்ளத்தாக்கிற்கு இறங்கிவருகிறார். சிலுவைக் கூடாக தெவன் உயிர்தெழுந்ததினால் புதிய ஜீவனுக்குள் பிரவேசித்தாலும் இன்னும் இருப்பது பழைய ஜீவியத்தின் அனுபவமாகிய பள்ளத்தாக்கிலேயே இருக்கிறார். ஏசாயா 41:10 எழுந்து விழுகிற இந்த பள்ளத்தாக்கில், எழுந்து கடந்து செல்லும்படி தேவனது புனர்நிர்மானத்தின் கிரியை ஆரம்பமாகிறது.

**தேவன் தங்கி உள்ள பள்ளதாக்கு.**

நீங்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட பின் பழைய வாழ்வின் பள்ளத்தாக்கின் அனுபவம் மறக்கப்டபடவில்லை. ஆனாலும் வித்தியாசம் என்னவெனில் இந்தப்பள்ளத்தாக்கில் இயேசு கிறிஸ்து உங்களோடு உங்களை உயர்த்தும் படி செயற்படடுக் கொண்டிருக்கிறார்.

## நிரம்பி வழியும் வாழ்வு

பெறுபேறு

இயேசு கிறிஸ்து காயப்பட்ட இருதயத்தை சுகப்படுத்துகிறார். சுட்டெறிக்கப்பட்ட பகுதி புனரமைப்பு செய்யப்படுகிறது. இப்போது நாம் செய்ய வேண்டியது இயேசு கிறிஸ்துவுக் கூடாக தேவனால் நமக்கு நியமிக்கப்பட்ட எதிர்காலத்தை நோக்கி கடந்து செல்வதேயாகும். இருந்த போதிலும் அநேகர் தமது கடந்த கால வாழ்க்கையின் நினைவுகளிலிருந்து விடுபடவில்லை. சுகப்பட்ட புண் மறுபடியும் வெளிப்படும். மன்னிப்பு கொடாததின் நிமித்தம் மற்றவர்களது பழைய பாவத்தின் சாபம் நம்மை தொடர்வதே நமக்கு கிடைக்கும் பெறுபேறுக்கு காரணமாகும். இப்படிப்பட்டவர்கள் ஒருவாரம்

சுகத்துடனும் மறுவாரம் வியாதியுடனும். அழும் குழந்தையின் கண்களுக்கு விரலினால் குத்துவது போல் உணர்வு அவர்களுக்கு ஏற்படும். அவர்கள் வாழ்வில் வேதனை, வெறுப்பு, பீதி, வெட்கம், சாபத்தின் உக்கிரம் பற்றிய அறிவை உணர்த்தி மீண்டும் ஒரு சுபீட்சத்திற்குள் கொண்டு செல்லுதல் அவசியம்.

பள்ளத்தாக்கின் மேலாக பிதாவின் வீட்டிற்கு

பிரசித்திபெற்ற மேய்ப்பத்துவ சங்கீதம் இவற்றிற்கு பெரும் ஆறுதலாக உள்ளது. மரண நிழலின் பள்ளதாக்கின் கடந்து சென்றாலும் எந்த உபத்திரவத்திற்கும் பயப்படேன். அநேக உபத்திரங்களுக்கு முகங்கொடுக்கிறவர்களுக்கும் பிரதான மேய்யப்பன் கிட்டிச்சேருகிறார். அவரது கோலும் தடியும் மரண பள்ளதாக்கினின்று என்னை வெளியில் கொண்டு செல்லும். அவரே தினமும் என் போஜன மேசையை ஆயத்தப்படுத்துகிறார். சத்துருவின் கரத்திலிருந்து என்னை மீட்டு பிதாவின் பந்தியில் அமர்தப்பட்டுள்ளேன். மேஜையின் அடியில் விழும் துணிக்கைகளை பொறுக்கி சாப்பிடும் ஒரு நாயைப் போல் அல்ல, நான் இப்போது அமர்ந்திருப்பது பிதாவின் மேசையில். இனி நான் ஒரு அநாதை

என எண்ணாதிருப்பேன். நான் தாமதித்தாலும் பின் வாங்கிப் போனாலும் பிதாவின் மேசையின் எனது ஆசனம் எனக்காக ஒதுக்கப்பட்டிருக்கும். இப்படிப்பட்ட திருப்தியின் நிமித்தம் பிதாவின் மேசையின் அமரும் படி எனது சகோதரனையும் ஆயத்தப்படுத்துவது எனது வாழ்வின் மேன்மையான மகிழ்ச்சியாகும்.

என் உடன் மேய்ப்பத்துவ சகோதரன் கதிரையில் அமரும் பட்சத்தில் அதன் காலை இழுத்து விடும் சுபாவம் எனக்கில்லை. தேவனது வீட்டில் அநேக அறைகள் உண்டு. அவரது பந்தியில் நிறைவான ஆகாரம் உண்டு. இரக்கம், அன்பு, பொறுமை போன்ற ஆகாரங்கள் தந்திரமுள்ள பிசாசு தனது ஆகார மேசையை இதற்குள் புகுத்த முற்படுகிறான். தேவனை அறிந்து கொண்ட நான் பிசாசின் கசப்பான ஆகாரமாகிய கசப்பு, பொறாமை, பழிவாங்கல், குற்றம் சாட்டல் போன்றவையே.

அவர் என் தலையை என்னையினால் அபிஷேகம் செய்து என் பாத்திரம் நிரம்பி வழிகிறது. பழைய வாழ்வின் கசப்பான அனுபவங்கள் என்னை விட்டு நீங்கிப் போயிற்று. தேவை ஏற்படும் பட்டசத்தில் அழைக்குமுகமாக பழைய வாழ்வின் பாவம், கோபம், பொறாமை, கசப்பு என்பன இல்லை. அப்படிப்பட்ட சுபாவமும் எனக்கில்லை. அதனால் என் பெயர் மிமுசா புடிகா (Meemusa Pudika) அல்ல இது தொட்டவாடிக்கான விஞ்ஞானப் பெயர் ஆகும். முற்சீலை போர்த்து இருப்பது நான் அல்ல. அது பிலாக்காய். என்னைப் பின் தொடருவது பழைய வாழ்வின் பிரதிக் கிரியைகள் அல்ல, தமிழ் இனத்தின் பிரதிக் கிரியைகள் அல்ல, வெள்ளால இனத்தின் பிரதிக் கிரியைகள் அல்ல, என்னைப் பின் தொடருவது தேவனது நன்மையும் கிருபையுமாமே.

எனது எதிர்காலத்தையும் நான் அறியேன். பழைய சாபம் நிறைவுற்றது நித்திய நித்தியமாய் தேவனது வீடே எனது உரிமைச் சொத்தாகும்.

## புனர்நிர்மாணம்

ஒரு வீட்டிற்கு பிள்ளை ஒன்று பிறந்துவிட்ட என்பதில் எல்லாம் சரி என நினைக்க முடியாது. இப்பிள்ளை நாளுக்கு நாள் தாழ்த்தப்பட்டு அல்லது தகப்பன் விட்டுச் சென்றுவிட்டான் அல்லது தகப்பனுக்கு அதிக வேலை என்பதிலிலேயோ..........

(உ+ம்) கீழ்படியாத மகன் சேற்றுக்கு சென்று விட்டால், அடிமையாகி விட்டால், வீட்டிற்கு வந்தும் அடிமையைப் போல் செயற்பட முற்பட்டாள் அவன் இன்னும் தான் யார் என்பதை அறியாதிருக்கிறான். நான் யார்? எனது அறிமுகம் என்ன? இதைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள்.

பிரதிக்கிரியைகள் இல்லாத எமது வாழ்வு தனிமை-யாக்கப்பட்டது நாம் அதை திரும்பிப்பார்ப்பதில்லை. முகத்தில் அடையாளம் உள்ள ஒருவர் எப்போது அதை குறித்தே சிந்திப்பார். எமது காயத்தை குறித்து நாம் சிந்திப்பது இல்லை. நாம் அதை சம்பலுக்குள் போட்டுவிட்டோம் அப்படிபட்ட வாழ்வை நாம் வாழ விரும்புகிறோம் ஆனாலும் பிரதிக்கிரியை இருக்கும் பட்சத்தில் நாம் அதற்கு முகம் கொடுத்தே ஆக வேண்டும்.

எனது விம்பத்தின் எந்த சாயல் இல்லாமல் போனது அது எப்போது நடந்து? இப்படியாக மகன் கீழே விழுந்து கிடந்த வேளை இது என்னுடைய மகன் என்று இரண்டு கைகளை நீட்டி தூக்க முற்படுவான். பாதாளத்தில் தள்ளுண்டு போனவர்களை நாம் சந்திக்க நேரீடும், ஆனால் தேவனது கரம் அவர்களை உயர்த்தும். எமக்கு தகப்பன் பிள்ளை ஆவியை இழந்த போது, பயம் ஏற்படுகிறது. பயம் ஏற்படும் பொழுது நாம் நிர்வானம் என்று உணர்கிறோம். அப்போது நாம் ஒழிந்து கொள்ள முற்படுகிறோம்.

(உ+ம்) தகப்பனுக்கு பயப்படும் ஒரு மகன் தம் வீட்டிற்கு விருந்தினர் வந்திருக்கும் வேளை அவன் வெளியே வரமாட்டான். அவரை வற்புறுத்தி அழைத்தாலும் அவன் வர மாட்டான். நம்

அனைவருக்கும் ஒரு கவலை உண்டு நாம் யார் என? தேவன் ஆதாமை நோக்கி ஆதாமே ஆதாமே நீ எங்கே? என்றார். எனது உறுதி என்னவெனில் நான் எங்கே இருக்கிறேன் என்பதே. எனது தவறை தேவனிடம் கொண்டு செல்ல பயம் உண்டு, எனது நிலையை நான் இழந்துவிடுவேன் என. எனது வாழ்வு மறைக்கப்பட்டுள்ளது. எனது வரங்கள் மறைக்கப்பட்டுள்ளது. எனது வரங்களை வெளிப்படுத்த எனக்கு ஒரு சந்தர்ப்பம் இல்லை. நான் யார்? நான் எங்கே? நான் என்ன செய்கிறேன்? நான் யார் என்பதிளிலேயே எனது முக்கியத்துவம் அடங்கியுள்ளது. மற்றவர் என்னை மதிக்கும் படி நான் என் வாழ்வில் கூட்டிக்கொள்ள வேண்டியது என்ன?

யோவான் 8:32 குமாரன் விடுவிப்பதை பிதாவானவர் விடுவிப்பார். எனக்கு கேட்கும் சத்தம் என்ன? நாம் கேட்கும் சத்தம் மாற்ற மடையும் போது நாம் நம்மைப் பற்றி கேள்விபடும் அறிக்கை “நீ என் நேசக் குமரன் உன்னில் நான் பிரியமாய் இருக்கிறேன்”. இவர் சொல்கிற பிரகாரமாய் செயற்படுங்கள் என பிதா உரைக்கிறார். இப்படிப்பட்ட புனர்நிர்மாணத்திற்குள் நாம் கடந்து வரும் போது,

நாம் எங்கு சென்றாலும், எப்படிப்பட்ட தராதிரமுடையவர்களை நாம் சந்தித்தாலும், இவர் சொல்வதை கேளுங்கள் என எம்மைப் பற்றி அவர்களுக்கு கேட்கப்படும்.

**புனர் நிர்மாணம் பற்றிய சில உதாரணம்.**

- மேவிபோசேத்
- நயோமி ∴ரூத்
- யோசேப்பு
- பாத்திரம் ஏந்துவோர்
- சக்கேயு

நாம் பழைய வீடுகளை புதிப்பிக்க விரும்புகிறோம் வாங்க முற்படுகிறோம். மற்றவர்களுக்கு பெற்றுக் கொடுக்க முற்படுகிறோம். தேவன் பழைய வீடுகளை மீள புதிப்பிப்பவர் அல்ல. நாம் நேசிக்கின்ற இரச்சிக்கப்படாத ஒருவரைப் பற்றி சிந்திக்கிறோம்.

தேவனால் முடியாது விட்டாலும் எமது முயற்சியால் அவரை இரட்சிக்கப்பட முயற்சி எடுக்கிறோம்.

மீள் பிறப்பு என்பது தேவனுடைய வீட்டில் புத்திராராக மாறுவதே ஆகும். மறுப்பிறப்பு அடைந்தவர்களுக்கு ஏன் இது ஏற்படுகிறது. கீழ் படியாத (கெட்ட) குமாரனுக்கு கொடுக்கப்பட்ட நீதியின் வஸ்திரம் போல் தேவனும் நமக்கு நீதியின் வஸ்திரம் வழங்குவார். நாம் நமது இரட்சிப்பின் வஸ்திரத்தை வர்த்திக்கப்பண்ணாமல் மற்றவர்களுக்கு வஸ்திரம் வழங்க முற்படுகின்றோம்.

**எனது பழைய வீட்டை புணர்ரமைப்பு செய்ய நாம் எடுக்கும் முயறங்சி என்ன?**

பழைய வாழ்வின் எதிர்பார்ப்பை கட்டியெழுப்புங்கள் புதிய வாழ்வை கட்டியெழுப்புங்கள் நாம் தேவனுடைய வீட்டிக்குள் பிரவேசிக்கும் போது பழைய ஞாபகங்கள் மறக்கப்படுகிறது அப்போது செம்மறிகளுக்கு உணர்வு ஏற்படுகிறது போல நாமும் நமது மேய்ப்பனுக்கு செவிக்கொடுப்போம். அந்த செவிமடுப்பதினாலேயே நீண்ட கால உறவு ஏற்படுகின்றது. அச் சந்தர்ப்பங்களிலேயே புத்திரர்கள் உருவாக்கப்படுவார்கள். எமது ஒவ்வொரு புத்திரர், புத்திரிகைகளுக்கு அறைகள் உண்டாக்க என்னை ஆசிர்வதிப்பீராக.

பழைய வீட்டின் சகலத்தின் புணர்நிர்மாணம் செய்ய முற்பட வேண்டாம். பிதாவின் மடியில் அமர்ந்திருக்கும் போது எமது காயங்கள் சீக்கிரம் குணமடையும் அடையாளங்கள் மாறிப்போகும். அப்போது நமக்கு பலன் உண்டாகும் எனது வெட்கம், உணர்வு, பயம் இல்லாமல் போகும். அப்போது எம்மால் எமது நீதியின் வஸ்திரத்தால் மற்றவர்களுக்கு ஆடைகளை தைத்துக் கொடுக்கலாம். நாம் தேவனுடைய வீட்டிற்கு பிரவேசிக்கும் போது இை வ யாவும் சுகமடையும்.

மெபிபோஷத் தாவீதுடன் மேசையில் அமர்ந்திருந்தது போல நாமும் பிதாவின் அன்பின் இல்லத்தில் தரித்திருந்தால் எம்மால் கூடும் எமது பூமிக்குரிய வீட்டை கட்டியெழுப்ப.

லூக்கா 19ல் சகேயு எல்லோராலும் வெறுக்கப்பட்டவன் ஆனால் அவன் சகலத்தை விட்டு விட்டப்படியினால் பிதாவின் வீட்டிற்குள் பிரவேசிக்க கூடியதாய் இருந்தது. நாம் வேறுப்பட்ட பதவிகளின் பின்னே போனால் தேவனுடைள பிள்ளையாக முடியாது.

தேவனுடைய எதிர்காலத்திற்கு நாம் கொண்டு செல்லப்படுகிறோம்.

யோசேப்பிற்கு தம் சொந்த சகோதர்களால் தீங்கிழைக்கப்பட்டதையும் அறண்மனையில் அவருக்கு ஏற்பட்ட அநீதியையும் அவன் மறந்தான் அவனுக்கு கேட்டது தேவனுடைய வீட்டின் சத்தம் மாத்திரமே. அவன் இழப்பீட்டை பெற்றுக்கொண்டான். பிதாவின் வீட்டில் நிலைத்திருந்த பின் அவன் தேவனால் நேசிக்கப்படுகின்ற வாலிபனாய் மாற்றப்படுகிறான் வாலிபன் தகப்பனாகிறார். எனவே எமது பழைய வீட்டை மறந்து பிதாவின் புதிய வீட்டிற்குள் பிரவேசிப்போம்.

**மேலதிக இழப்பீடு.**

ஏசாயா 61:3,4 சீயோனில் துயரப்பட்டவர்களை சீர்படுத்தவும் அவர்களுக்காகு, சாம்பலுக்கு பதிலாக சிங்காரத்தையும், துயரத்திற்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்கு பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும் அவர் என்னை அனுப்பினார். அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின் நீதியின் விருட்சங்களென்னப்படுவார்கள்.

அவர்கள் நெடுங்காலம் பாழாய்க்கிடந்தவைகளைக் கட்டி
பூர்வத்தில் நிர் மூலமானவைகளை எடுப்பித்து தலைமுறை

தலைமுறையாய் இடிந்து கிடந்த பாழான பட்டனங்களை புதிதாய் கட்டுவார்கள்.

**ஈசாக்**

ஈசாக் துரோகத்தனத்திலிருந்து மீண்டும் செழிப்பிற்குள் பிரவேசிக்கிறார்.

முதலாவது கிணறு :- ஆதி 26:20
இரண்டாவது கிணறு :- சித்தனா, துரோகத்தனம்.
மூன்றாவது கிணறு :- ரெகபோத், செழிப்பும் விசுவாசமும்.

**யோசேப்பு**

மிகவும் அன்பான மகன் யோசேப்பு தம் சொந்த சகோதர்களால் கிணற்றில் போடப்பட்டான். இருந்த போதிலும் அவன் தனது புத்திரபாக்கியத்தை இழந்துவிடவில்லை யோசேப்பு போதிபார் ராஜாவின் வீட்டின் அடிமையானாலும் போதிபரின் மகனைப் போல் அவன் இருதயத்திற்கு பிரியமானவனான். எனவே அவன் உயர்த்தப்பட்டான். அவனுக்கு ஏற்பட்ட அநீதியின் நிமித்தம் சிறைக்கு செல்ல நேரிட்டது. அங்கேயும் அவன் சிறைக் காவலாளியின் இருதயத்தை வென்று கைதிகளுக்கு மேன்மையானவனான்.

இதில் என்ன விளங்குகிறது என்றால் அவனுக்கு விரோதமாய் யார் என்ன தீங்கு செய்தாலும் தேவனது விஷேசித்த அபிஷேகமும், பெற்றோரது தீர்க்கதரிசனத்தின் கனவும் அவனது வாழ்வில் குறைவற்று செயல்பட்டபடியினாலேயே. சங் 105:19 அதினாலேயே யோசேப்பு தேவனது முழு உரிமைக்கும் மற்றும் வாழ்வின் பெரிதான இளப்பீட்டை பெற தகுதியானார்.

யோபு :- யோபு 42:10 தேவன் அவர்களது அடிமைத்தனத்திலிருந்து மீட்டல்
எலிசா :- ஆடுகளை மேய்த்தவன் அரசனான்
எஸ்தர் :- அநாதையானவள் அரண்மனை அரசியானாள்

நகோமி :- பிள்ளைகளை இழந்த விதவை மேசியா பரம்பரையில் தாயானாள்
லேயாள் :- கைவிடப்பட்ட மனைவி பலமான தாயானாள்

யோசேப்பு :- அநாதையாய் பெற்றோரது வீட்டை விட்டு புறப்பட்டு போனவன் ஜாதிகளின் தந்தையாய் பெரும் செல்வந்தனாய் சீமானாய் திரும்பி வருகிறான்.

எகிப்தில் அடிமையாய் இருந்த இஸ்ரவேலர் தங்களால் நடப்படாத செழிப்பான தேசத்தையும் மற்றவர்களால் கட்டப்பட்ட நகரத்தையும் உரிமையாக்கி கொண்டார்கள்.

மேவிபோசேத்:- தான் ஒரு நாய் என சொல்லிக் கொண்டவன் இராஜாவின் மேசையில் அமரக்கிடைத்தமை (2சாமு9:7)

**மேலதிக வழிமுறை**

20% மேலதிகமாக கிடைத்தல் :- லேவியராகமம் 5 அநீதியின் பலி

| | | |
|---|---|---|
| இரட்டிப்பாய் பெறுதல் | :- | யோபு 42:10 |
| நான்கு வீதம் பெறுதல் | :- | யாத்திரகாமம் 22:1 |
| ஐந்து மடங்கு பெறுதல் | :- | யாத்திரகாகமம் 1:22 |

முற்கள் நிறைந்த பூமி செழிப்பானது மத் 13 விதைகளை பட்சிக்கிற பறவைகளை துரத்தி விடுங்கள் ஆதி மரணத்தின் நிலத்தை அழித்து விடுவோம் செழிப்பை உண்டாக்குவோம் அறுவடை ஆயிரம் மடங்காய் அறுபது மடங்காய் நூறு மடங்காய் இளப்பீடு ஆயிரம் மடங்கு உபாகமம் 1:11

**மகன் தகப்பனாகுதல்**

தகப்பன்
வாலிபன்
மகன்

இயேசு கிறிஸ்துவின் மகிழ்ச்சியே எனது மகிழ்ச்சி

நான் பரலோக தந்தையின் வீட்டில் அமர்ந்திருக்கும் நேசக்குமாரன் என் வாழ்வின் பெறுமதியானதும், அழியாத வெற்றிக்கு ஒப்பானது இன்னும் அதிகமாய் தேவனைக் குறித்து அறிவதே அவரைப்பற்றி அறிவதே என் வாழ்வின் அழியா சொத்து அவரது வேலைக்கு உட்படுதல் நான் செய்யும் வேலை பரலோக பிதாவினுடையது. அது மேலும் குடும்பங்களை உருவாக்கி வர்த்திக்கப்பண்ணுவதே ஆகும். சங் 78:72

தாவீது இராஜ்யபாரம் பொறுப்பெடுக்கும் போது கீரிடம் இருக்கவில்லை, தாவீதுக்கு அரண்மனை இருக்கவில்லை, அவர் மேய்ப்பனாகத்தான் ஆரம்பித்தார். தாவீதைப் பற்றிய அவன் தகப்பனின் நிலைப்பாடு ஆடுகளை மேய்ப்பவன் என்பதே. ஆனாலும் தேவன் அவரைக் குறித்து சிந்தித்தது தமது வேலைக்காய் அவனுடைய இருதயத்தின் ஆயத்தத்தை. நாம் செய்யும் வேலையை பாராமல், செய்வதை திருந்த செய்வோம் ஈசாவின் எட்டாவது பிள்ளையைப் பார்த்து தேவன் சொன்னது “நான் அவரைத் தெறிந்து கொண்டேன்” தாவீதிற்கு இருந்த ஒரே ஒரு சொத்து வீணை இசைத்து தேவனை நமஸ்கரிப்பதே. இதை குறித்து அவன் ஆச்சரியப்படவில்லை. தாவீது இராஜ்யபாரத்தை கைப்பற்றிய உடன் அவன் முதலாவது நிறைவேற்றியது உடன்படிக்கை பெட்டியை நகரத்தின் உயர்வான இடத்தில் வைப்பதே. அதன் தேசத்து குடிகளை ஒன்று சேர்த்து தேவனை ஆராதிக்க ஒழுங்கு செய்தான். அவன் யுத்தத்திற்கு ஜனங்களை ஒன்று திரட்டுவதை விட்டுவிட்டு ஆராதிக்க ஜனங்களை ஒன்றுதிரட்டினான். தாவீது 40 வருடங்களின் பின் அந்நியரது கீரிடத்தை பாதுகாத்துக் கொள்ள இராணுவத்தை ஏற்படுத்தினான். அதன் பின் அவனது கண் பழுதடைந்து போனது.

இனதினிமித்த அதன் தண்டனையை அனுபவிக்க நேரிட்டது. எழுபதுனாயிரம் பேர் மரித்தனர். தாவீது மனந்திரும்பினான், மீண்டும் தேவனோடு உறவை பலபடுத்திக் கொண்டு தனது ஓட்டத்தை ஓடினான்.

குஷ்டரோகம் நியாயத்தீர்ப்பின் வியாதியே எனவே பாவத்தின் நியாத்தீர்ப்பிலிருந்து நம்மை மீட்க இயேசு கிறிஸ்து வந்தார். யோவான் 12:44, மாற்கு02 பாவத்தை மன்னிக்க அதிகாரமுடையவராய் உலகத்திற்கு பிரவேசித்தார். சமாரிய ஸ்திரியைப் போன்ற சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்களை அவர் அழைத்தார். இது சமுதாயத்திற்கு ஒரு பிரச்சனையாகி விட்டது.

_______ஏசாயா 42:3 அவர் நெரிந்த நானலை முறியாமலும் மங்கி யெறிகிற திரியை அணையாதவர்

_______மாற்கு 2:28ன் படி யூதர்கள் ஆறு நாட்கள் வேலை செய்து ஏழாவது நாள் தேவனுக்காய் ஓய்ந்திருந்தனர். இந்த ஓய்வு நாள் ஒரு பலி இது மனுஷருக்கு பாரம் ஒரு நுகம், யூதரோ மனிதர் மேல் சமயரீதியான பாரத்தை சுமத்தினர்கள் ஓய்வு நாள் இருப்பது மனிதர்களை விடுவிக்கவே என இயேசு சிறிஸ்து கூறினார்.

_______மாற்கு 3/1-7 அவரது ஊழியமானது அநேக இடங்களில் பரவப்பட்டது அநேகர் அவரது கிரியைகளை கேள்விப் பட்டு கூடி வந்தனர். அநேக

வியாதிஸ்தர்கள் சுகமடையும்படி கூடி வந்தனர்.

மாற்கு 3:13 அவர் ஒரு மலையின் மேல் ஏறி தமக்கு சித்தமானவர்களைத் தம்மிடத்தில் வரவழைத்தார். அவர்களை அனுப்பிவைக்கும்படியாக.

மத்தேயு 11:25 பிதாவே வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து பாலகருக்கும் வெளிப்படுத்தியபடியால் உம்முடைய ஸ்தோத்தரிக்கிறேன்.

வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே என்னிடம் வாருங்கள் என அழைத்தார் எமது வாழ்வின் பாரத்தை அவர் நீக்குகிறார் பழைய வாழ்வை மறப்போம் ஒரு சிலர் இன்றைய நாளைவிட நாளைய நாள் நலம் என பகல் கனவு காண்பார்கள்.

இன்று தேவன் நமது கரங்களில் கொடுத்ததையிட்டு நன்றி செலுத்தி முன்னோக்கி செல்வோம். தேவனே இன்று நீர் என் கரங்களில் தந்த வேலையை 30மடங்காய், 60மடங்காய், 100மடங்காய் அதிகரிக்கும் படி ஞானத்தை தந்தருள்வீராக. இயேசுவின் நாமத்தில் கொடுக்கப்பட்டதை நிறைவேற்றுவோமாக. அவரது இராஜ்யத்தை முதலாவது தேடுவோமாக.

மத்11:28 வருத்தம்; நிறைவேற்ற முடியாத ஒன்றிற்காய் பிரயாசப்படுதல் உள்ளதைக் கொண்டு திருப்தி அடையாமை. வேரொரு நுகரத்தடியை கழுத்தில் சுமத்தல். நிறைவேற முடியாத ஒன்றிற்காய் கனவு காணுதல் என்பதே.

எமது கரங்களுக்கு இயேசு கிறிஸ்து கொடுத்ததை கற்றுக்கொள்வோமாக தேவனது மகிழ்ச்சிக்குள் பிரவேசிப்போம் எல்லா புத்திரரும் தேவபிதாவின் இருதயமுடைய ஆவிக்குரிய தந்தையாய் மாறுவதே தேவனுடைய விருப்பம்.

இயேசு கிறிஸ்து முதலாவது ஆண்டில் நிறைவேற்றியவைகள்

01. இராஜியத்தை குறித்து இலகுவாய் பேசினார் மாற்1:14,15
02. சீஷர்களை அழைத்தல் மாற்கு 1:16,17
03. அசுத்த ஆவிகள் மீது வல்லமை வெளிப்படல் மாற்1:21-28
04. குஷ்டரோகியின் மீதுள்ள சாபத்தை அகற்றல் மாற்3:40
05. பாவத்தை நீக்க அதிகாரமுடையவர் என வெளிப்படுத்தல் மாற்கு 21:1-12 வரிவசுலித்தல், விபச்சார ஸ்திரி
06. சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டுள்ள ஜனங்களை அவர் ஒன்று படுத்தினார். மாற்று 2:13-17
07. புதிய திராட்ச இராசத்தை, புதிய வஸ்திரத்தோடு இணைத்து உடன் படிக்கை பண்ணுதல் மாற்கு 2:12-22

08. ஓய்வு நாளுக்கு ஆண்டவர் என வெளிப்படல் மாற்கு 02:23-28, 3:1-6

09. தேசம் எங்கும் வியாபித்த சேவை மாற்கு 03:17
10. பன்னிரெண்டு பேர்களது இராஜ்யம் மாற்கு 03:13-19

**இராஜ்ய வியாபித்தலுக்கு விரோதமான தடை**

01. அவரது உறவினர்கள் மாற்கு 3:20,2
02. சமய நிறுவனங்கள் (பரிசெயர் சதுசெயர்) மத் 9:10-11 லுக்கா 09:10-11

**முக்கிய தேவை மீகாயம்**

எனக்குள் கிரியை செய்கிற முக்கிய காயம் என்னவெனில் துவேசம், வேதனை, வெட்கம் எல்லோருக்கும் காயம் உண்டு. பெரிதான காயம் சிலுவையே. எல்லோருடைய காயம் ஆனது துவேசம், வேதனை, வெட்கம் என்பன சிலுவையில் உண்டு. சுகமும் சிலுவையில் உண்டு. சிலுவை போன்ற ஒரு துன்பம் இவ்வுலகில் வேறெதுவும் இல்லை. என்னுடைய காயம் நான் கதைப்பவர்களுடைய காயம் என்பன சிலுவையில் உண்டு. காயம் ஏற்பட்ட போது எவேறெனும் கிட்ட வந்தால் பயம் உண்டாகும். நெருப்பினால் சூடப்பட்டவன் மின்மினிப்பூச்சுக்கும் பயப்படுவான் உலகமானது காயம் ஏற்பட்டவர்களை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆனாலும் இயேசு கிறிஸ்து உடைந்த உள்ளங்களை புறக்கணியார்.

**மேய்ப்பன் செம்மறி மற்றும் காயம்**

தேவன் உலகத்தில் மேய்ப்பர்களையே சிருஷ்டித்தார் செம்மறிகளைப் போல காயம் ஏற்படாத படி. ஆனாலும் மேய்ப்பனும் செம்மறியும் பயப்பட்டனர். ஒரு சில வேளை மேய்பனால் செம்மரிகள் காயப்பட்டன, உலகில் மேய்ப்பன் தகப்பன், தாய் ஆசிரியர், எஜமான் ஆளுகை செய்பவர், என்போர் தாம் பாதுகாக்க வேண்டியவர்களை தாமேகாயப்படுத்தினார்கள் எனவே பயம் உண்டாயிற்று.

லுக்கா 2:8-10 அப்பொழுது அந்த நாட்டில் மேய்ப்பாளர்கள் வயல்வெளியில் தங்கி இராத்திரியிலே தங்கள் மந்தைகளை காத்துக் கொண்டிருந்தார்கள் அவ்வேளையில் கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தல் வந்து நின்றார். கர்த்தருடைய மகிமை அவர்களை சுற்றிலும் பிரகாசித்தது அவர்கள் மிகவும் பயந்தார்கள் தேவதூதன் அவர்களை நோக்கி பயப்படாதிருங்கள் இதோ எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்.

மேய்ப்பர்கள் தேவதுதனை கண்ட போது பயப்பட்டனர் ஆனால் தேவதூதர்களை கண்ட உடன் சந்தோஷமடைய வேண்டும். அதுவே நல்லது ஏன் அவர்களை பயந்தனர்? தேவதூதன் வந்தது அவர்களை பயமுண்டாக்க அல்ல பயதிலிருந்து அவர்களை மீட்க சந்தோஷத்தை உண்டாக்க.

எனவே இனியும் நாம் பயப்பட வேண்டியது இல்லை அந்த பயத்திற்கு காரணம் எமது வாழ்வில் ஏற்பட்ட காயத்தினால் காயத்திற்கு பதிலாக மேலும்

காயம் ஏற்படுவது விரும்பத்தக்கது அல்ல.

01. உங்கள் வாழ்வில் பெரிதான காயம் ஏற்றபட்ட நாள் எது?

02. யார் நிமிர்த்தம் காயம் ஏற்பட்டது?

03. அச் சம்பவத்தால் உங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு என்ன?

## எமது ஜீவியத்திற்கு பயம் ஏற்பட்டது எப்படி?

ஆதி 3:1-10 தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் சார்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உணடோ என்றது.

ஸ்திரீ சர்ப்பத்தை பார்த்து நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளை புசிக்கலாம் ஆனாலும் தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து தேவன் நீங்கள் சாகாத படிக்கு அதைப் புசிக்கவும், தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றான்.

அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நொக்கி நீங்கள் சாவதில்லை நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும் நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது.

அப்பொழுது ஸ்திரீயானவள் அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும் பார்வைக்கு இன்பமும் புத்தியை தெரிவிக்கிறதற்கு இச்சிக்கப்படதத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது. என்று கண்டு அதன் கனியை பறித்து புசித்து தன் புருஷனுக்கும் கொடுத்தாள். அவனும் புசித்தான்.

அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்கள் திறக்கப்பட்டது அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து அத்தியிலைகளைத் தைத்து தாங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டு பண்ணினார்கள் பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிறதை தெவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள் அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக் கொண்டார்கள்.

அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமை கூப்பிட்டு நீ எங்கே இருக்கிறாய் என்றார்கள் அதற்கு அவன் நான் தேவருடைய சத்தத்தை தோட்டத்தில் கேட்டு நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து ஒளிந்துக் கொண்டேன் என்றான்.

ஆதாம் சொன்னான் நான் நிர்வாணியாய் இருப்பதினால் பயந்து ஒளிந்துக்கொண்டேன். நமக்கு பயம் ஏற்படும் பட்சத்தில் முகம் கொடுக்க முடியாத நிலை ஏற்படுகிறது யாராவது என்னை சந்தேகிப்பார் எனவே நான் பிரயோஜன மற்றவன் நான் பெறுமதியற்றவன் பாதுகாப்பற்ற நிலை என்ற உணர்வு எப்போது திகிலுடனேயே வாழ்வு பயம் ஏற்படும் போது யாரிடமாவது பாதுகாப்பு நிழல் அன்பு என்பவற்றை நாடுகிறோம்.

01. நான் யாருக்கு சொந்தமானவன்? எனது பாதுகாவளி யார்? பயத்தினால் ஒளிந்துக் கொண்டான்.நெருக்கப்பட்ட நிலை அன்பு இல்லாமல் போனது போன்றது.

02. எனது பெறுமதி என்ன? என்னை யார் நம்புவார்கள்? பெறுமதிப்பற்றவன் என்ற உணர்வு வெட்கம் ஏற்படுகிறது பாவம் பிரவேசிக்கிறது நிர்வாணம் வெளிப்படுகிறது.

03. என்னை ஏற்றுக்கொள்வார்கள் இல்லை நான் பெறுமதியானவன் என உணர்ந்து என்னிடம் கிட்டிச் சேர்வது யார்? என்னை நேசிப்பது யார்? நான் யார்? தெரியாது முகம்கொடுப்பது இல்லை நான் தனிமையானவன் ஒளிந்து கொள்கிறான்.

**நான் தேவனில்லாமல் தேடிக்கொண்ட தீர்வு**

01. உமது அன்பை எனக்கு தா

02. எனது பெறுமதியை அதிகரித்துக் கொள்வது

03. உறவு - நீங்கள் என்னை தவிற வேறு யாரையும் நேசிக்க வேண்டாம் வாழ்வினுள் பிரவேசித்தவரை உரிமையாக்கிக் கொள்ளுதல். 02தீமோ 2:7 தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடமால் பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருகிறார்.

**தேவன் நமக்கு பாவத்திலிருந்து விடுதலையான வாழ்வையே தந்திருகிறார்.**

01. நம் எல்லா இருதயங்களிலும் அன்பின் குறைபாடு உண்டு எனவே எப்போதும் நாம் பயப்படுகிறோம்.

02. பயத்தினால் ஒருவருக்கொருவர் நம்பிக்கை அற்றுபோகிறது இவர் என்னை வெறுத்துவிடுவாரோ என்ற உணர்வு ஏற்படுகிறது.

03. அதினாலே என் இருதயம் சொல்லும் யாரினதும் உறவு இன்றி தனித்திரு என்று இதினால் கலகக்காரனாகி விடுகிறோம்.

04. இதினால் நாம் அன்பு செலுத்த அன்பை பெற்றுக்கொள்ள பயப்படுகிறோம். ரோமர் 8:15 அந்தப்படி திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியை பெற்றீர்கள்.

இருந்த போதிலும் தேவனது அன்பு தவறிக்போகாது ஒருவரை விட்டு

ஒருவர் விலகி இருக்க அவசியமில்லை.

கொரி 13:14 கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும் தேவனுடைய அன்பும் பரிசுத்தாவியினுடைய ஐக்கியமும் உங்கள் அனைவரோடுங் கூட இருப்பதாக ஆமென்.

பயம் :- தேவனுடைய அன்பு
பெறுமதி :- இயேசு கிறிஸ்துவின் கிருபை
தனிமை :- பரிசுத்தாவினுடைய ஐக்கியமும்

ரோமர் 14:17 தேவனுடைய இராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல அது நீதியான சமதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமாயிருக்கிறது.

தேவனுடைய - சமாதானம்
இயேசுகிறிஸ்துவின் - நீதி
பரிசுத்தாவியின் - மகிழ்ச்சி

**நாம் அறிந்த சகலவற்றை இயேசு கிறிஸ்து அனுபவித்தார்.**

| | | |
|---|---|---|
| வேறுபடல் | :- | தேவன் ஒப்புரவாக்கினார். |
| சுயரூபம் இல்லாது போதல் | :- | தேவன் புனர் நிர்மாணம் செய்தார். |
| குற்றம் சாட்டப்படல் | :- | தேவன் நீதிமானாக்கிறார்கள் |
| குறை கூறுதல் | :- | தேவன் வெறுப்பில் இருந்து மீட்டார். |
| எனக்கு ஒன்றுமில்லை | :- | தேவன் ஒரு உரிமையைத் தந்தார். |
| அவர் பட்ட அவமானம் | :- | எனக்கு தேவபிள்ளை என்ற கௌரவம் கிடைத்தமை |
| அவர் புறக்கணிக்கப்பட்டார் | :- | நான் ஏற்றுக் கொள்ளப்பட்டேன் |
| அவர் பயத்திற்குட்பட்டார் | :- | நான் அன்பை பெற்றுக் கொள்ளும் படி |
| அவர் அடிமையானார் | :- | நான் பிள்ளையாகும் படி |

# தேவனது மகிமை

லூக்கா 2:8-10 அப்பொழுது அந்த நாட்டிலே மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக் கொண்டிருந்தார்கள் இவ்வேளையில் கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நின்றான் கர்த்தருடைய மகிமை அவர்களை நோக்கி பயப்படாதிருங்கள் இதோ எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்.

உங்களுக்கு என்றாவது தேவனது மகிமையின் வல்லமை அணுபவிக்க நேரிட்டதுண்டா?

மனிதன் கண்களால் காணமுடியாத தேவன் அன்று எவறாலும் ஏற்றுக்கொள்ளாது அங்கீகரிப்பில்லா மிகவும் தாழ்ந்த மேய்ப்பர்களிடமிருந்து பேசியதுண்டானால் உங்களோடும் பேசுவார் என நிணைத்ததுண்டா?

தேவன் எப்படி நமக்கு வெளிப்படுவார் ரோமர் 1:20 எப்படியென்றால் காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள் உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே உலகமுண்டானது முதற் கொண்டு தெளிவாய்க காணப்படும் ஆதலால் அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை

**தேவன் எப்படி பட்டவர்?**

கண்களால் அவரை பார்க்க முடியாதவர் சரிரமாற்றவர் ஆனாலும் ஆவி உள்ள நம்மைப் போன்ற நபரே அப்படியென்றால் அவறைப்போலவே சிருஷ்டிக்கப்பட்டுள்ளோம். ஆதி 1:26 பின்பு தேவன் நமது சாயலாகவும் நமது ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும்

ஆகாயத்துப்பறவைகளையும் பூமியின் மேல் ஊரும் சகல பிராணிகளையும் ஆண்டவர்கள் என்றார்.

எனவே நாம் தேவனோடு உறவாடலாம் அவருக்கு அறியும் காரியத்தையும் நாமும் அறியலாம் அவர் தகப்பன் என்பதினால் நமக்குள்ளும் அந்த தகப்பன் என்ற உணர்வு உண்டு அவர் சகலத்தையும் அறிந்த சர்வ வியாபியாய் சர்வ ஞானியால் இருப்பவர் இவ்வுலகத்தை தமது ஆவியால் ஆளுகிறார்.

**நாம் எப்படிப்பட்டவர்கள்? ஆதி 2:7**

தேவனாகிய கர்த்தர் மனுவுனை பூமியில் மண்ணினால் உருவாக்கி ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான்

நாம் ஆவி ஆத்துமா சரீரம் இருப்பதினால் உலகத்திலே சுவையை உணருகிறோம். நாம் கனியை சுவைத்துப் பார்க்க கண்களினால் சுவையை அறிவது இல்லை அது போல காதுகளால் இசையை கேட்கிறோம் மூக்கினால் உலகத்தை பார்க்கிறோம் அது போல நமக்கு ஒரு சரீரம் உண்டென் பதினால் தொடுகையை உணருகிறோம் நமக்குள் ஜீவன் இருப்பதினால் ஒருவரோடொடுவர் உறவை ஏற்படுத்திக்கொள்கிறோம் நமக்குள் ஆத்துமா இருப்பதினால் நாம் தேவனைத் தேடுகிறோம்.

**நாம் எப்படி தேவனை அறிவது?**

தேவன் நம் இருதயத்தோடு பேசுகின்றார். அவரை நாம் காணாவிட்டாலும் நாம் விளங்கிக்கொள்ளும் படி நம்முடன் பேசுகிறார். நாம் பேசும் போது நமக்கு உத்தரவு கொடுக்கிறார் அனாலும் மனுஷன் அவரது கிரியை மாத்திரம் எதிர்ப்பார்க்கின்ற படியினால் அது தாமதிக்கின்ற போது தேவன் பதில் கொடுக்கவில்லையே என்கிறான். ஆனாலும் ஜெபிப்பது தேவன் என்ன சொல்கிறர் என்பதை அறியவே. எனது வாழ்வில் தேவன்

என்ன பேசுகிறார். என அறியவே அவரது திட்டம் என் வாழ்வில் என்ன என அறியவே. அதினால் அவரது நற்குணம், அவரது உயர்வு, அவரது திட்டங்களை நாம் அறிய தேவனுக்கு எம்மை அர்ப்பணிப்போம். இயேசு சொன்னர் ஜெபம் பண்ணும் போது பரலோகத்தில் வாசமாயிருக்கி எங்கள் பிதாவே என்று ஜெபிக்கும் படி "பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக உம்முடைய இராஜ்யம் வருவதாக உம்முடைய சித்தம் பரமண்டலங்களில் செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக"..........என்ற தொடர் ஜெபமே

## பெரிதான எதிர்பார்ப்பு.

லூக்கா 2:10 தேவன் அவர்களை நோக்கி பயப்படாதிருங்கள் இதோ எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்.

எல்லா மனிதருடைய இருதயத்திலும் ஏதோ ஒரு எதிர்பார்ப்பு உண்டு. அந்த எதிர்பார்பு நிறைவேறுவதே நமது வாழ்வில் சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியாகும்.

**மனிதனின் எதிர்பார்ப்பு என்ன?**

அன்பு! தமக்கு நன்மை உண்டாகுதல், வாழ்விற்கு பாதுகாப்பு, நல்ல எதிர்காலம் தொழிலில் உயர்வு, நல்ல வீடு, பிள்ளைகள் பல்கலைக்கழகம் வரை கற்றல், நல்ல தொழில், சம்பள உயர்வு, மனிதர்களாகிய எமக்கு இப்படிப்பட்ட எதிர்பார்ப்புகள் உண்டு எமது எதிர்பார்ப்பு இவற்றை அடைவதே. அதற்காய் நாம் பிரயாசப்படுகிறோம். ஒரு எதிர்பார்ப்பபை நாம் நிறைவேற்றிக் கொண்ட பின் மேலும் ஒரு எதிர்பார்ப்பு உண்டு, நிறைவேற்றிக் கொள்ள. என இப்படியாக எதிர்பார்ப்புகளுக்கு முடிவேயில்லை. தாகத்தைப் போல் இந்தத்தாகத்திற்காய் தண்ணீர் பருகுகிறோம்.
தாகம் உண்டாக, உண்டாக உப்புத்தண்ணீர் பருகுகிறோம். எமது

எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொள் பல முயற்சிகளை எடுக்கிறோம்.

- உமது வாழ்வின் பெரிதான எதிர்பார்ப்பு என்ன?
- உமது வாழ்வின் பெரிதான எதிர்பார்பு சிதைவடைந்துள்ளதா?
- உமது வாழ்வின் எதிர்பார்ப்பு சீர் குலைந்த நாள் எது?
- உமது வாழ்வின் வெற்றி என்ன?
- உமது எதிர்கால எதிர்பார்ப்பு என்ன?

எமது வாழ்வின் வாஞ்சைகள் நிறைவேற எதிர்பார்த்திருந்த எதிர்பார்ப்புகள் சிதைவடைந்து அப்படியானதொன்று இருந்ததாக ஞாபகமே இல்லாமல் போகிறது.

**நமக்கு ஏன் அப்படி நடந்தது?**

திருடன், திருடவும், கொள்ளவும், அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ ஜீவன் உண்டாயிருக்கவும். அது பரிபூரணப்படவும் (யோவான் 10:10)

நாம் அறியாமலே நமக்குள் பிரவேசித்த திருடன் எமது எதிர்பார்ப்பை திருடியபடியினால் அது இல்லாமல் போனது

சங்கீதம் 34:08 கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள் அவர் மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்

தேவன் சொல்கிறார் அவர் நல்லவர் என்பதை ருசித்துபாருங்கள் என்று அவரை அறிந்து கொள்ளுங்கள் அவர் கெட்டவர் அல்ல நமது எதிர்பார்ப்புகள் சிதைவுற அனுமதிக்க மாட்டார். அந்த கரத்தில் பெரிய வெளிச்சம் பிரகாசிக்கிறது சுரங்கதினூடாக செல்லும் போது சுரங்கம் முடிவடைவது போல் எமது ாழ்வில் எந்நாளும் இருள் இல்லை.

**எமது எதிர்பார்ப்புகள் நிறைவேறாத பட்சத்தில் நமக்கு ஏற்படும் சிந்தனை?**

எனக்கு என்னைப்பற்றியே கவலை வேதனை உண்டாகிறது மற்றவர் மீது பொறாமை கோபம் என்பன ஏற்படுகிறது.

ரோமர் 3:23 எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி

அற்றவர்களாகி என்பது குறைவடைந்து என்பதே இதினால் எமக்கு துக்கம் வேதனை அதினால் தீமையான குணதிசியம் பாவ சிந்தனை எமக்குள் ஏற்படுகிறது.

ரோமர் 6:23 பாத்தின் சம்பளம் மரணம் தேவனுடைய கிருபை வரமோ நம்மடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்

பாவத்தினால் கிடைப்பது மரணம் ஆனாலும் தேவனது வரம் அல்லது பரிசு அழியாத ஜீவன் தந்துள்ளார். திருடனால் திருட முடியாது எமது பாவ சுபாவம் என்பது எதிர்பார்ப்பு நிறைவேறாதபடியினால் ஏற்பட்ட வைராக்கியம் வெறுப்பு, கோபம், கசப்பு, பொறாமை போன்றவை நமக்குள் உண்டு என்பதை ஏற்றுக்கொண்டு அவற்றிலிருந்து விடுதலை அடைந்து நமக்கு தேவனது ஜீவன் கிடைக்கும் நாம் நல்ல தண்ணீரை குடிக்க வேண்டும்.

**நிறைவேறாத எதிர்பார்ப்பினால் நமக்குள் ஏற்பட்ட குறைவை நிறைவு செய்ய**

**என்ன செய்யலாம்?**

இழந்து போனதை அடையும் படி மனிதனுடைய இருதயத்தில் வாஞ்சை உண்டு இந்து எதிர்பார்ப்பை அடையும் நன்மையினாலேயே தீமையினாலேயோ கிரியை செய்ய

முற்படுகிறான். ஆனாலும் பரமபிதா நல்லவர் ஆனபடியினால் என்னைக் குறித்த ஒரு திட்டம் அவரிடம் உண்டு. நோக்கம் உண்டு நாம் பரமபிதாவின் பிள்ளைகளானாலும் எமது வாழ்வின் எதிர் பார்ப்புகள் நிறைவேறாததினால் ஏற்பட்ட குறைவை அவர் நிறைவாக்குகிறார். அவரது திட்டம் நிறைவேறுகிறது.

இலங்கையின் மிகவும் பெரிய தனவந்தர் (உலகத்தில் பெரிய தனவந்தர் பில்கோஸ்ட்) உன்னை பிள்ளையாய் தந்து எடுக்க விரும்புகிறார். அதற்கு உடன்படுகிறாயா? சிந்தித்துப் பார்.

**பெற்றோரது பிள்ளையாகும் படி உன்னைத் தேடுகிறார்.**

யோவான் 1:12 அவருடைய நாமத்தின் மேல் விசுவாச முள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும் படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்.

# இழந்து போனதை மீளவும் பெற்றுக்கொள்ளுதல்

சுவிஷேம் என்பது என்ன? காணாமல் போனதை கண்டடைதல் உமது ஜீவியத்தில் பெரிதான இழப்பாக எதைக் கருதுகிறீர்கள். (உ+ம்)

01. தகப்பனை இழத்தல்
02. தொழில் அற்றுப்போதல்
03. பரீட்சையில் தோல்வி
04. அதிர்ச்சியடைதல்
05. விபத்தினால் அங்கவீனமடைதல்
06. திருமணத்தில் தோல்வி

**நீங்கள் மிகவும் அக்கரையாக எதை பாதுகாக்க எதிர்பார்ப்போடு இருக்கிறீர்?**

தன்னை விட அதிகமாக எதை மேன்னையாக கருதிகிறீர்கள்? எனக்கு ஏற்பட்ட நிலை என் பிள்ளைக்கு வரக்கூடாது இப்படிப்பட்ட ஒரு அவமானம் இனி வேண்டாம்.

லூக்கா 2/10-13 தேவதுதன் அவர்களை நோக்கி பயப்படாதிருங்கள் இதே எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை அறிவிக்கின்றேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்கு தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளில் சுற்றி முன்னணையிலே கிடைத்திருக்க காண்பீர்கள் சுற்றி முன்னணையிலே கிடைத்திருக்க காண்பீர்கள் இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான். அந்தஷணமே பரமசேனையின் திரள் அந்தத்துதனுடனே தோன்றி உள்ளத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதனமும் மறுவுர் மேல் பிரியமும் உண்டாவதாக.

ஆண்டவர் இயேசு என்னும் இரட்சகர் உங்களுக்காக (உங்களுக்கு தனிப்பட்டமுறையில்) தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்.

**ஏன் ஒரு இரட்சகர்? எண்ணத்தை மீட்பார்? என்னத்திலிருந்து மீட்பார்?**

மீட்பு என்பது நெருக்கப்படடிருப்பதை விடுவித்தல் இயேசு கிறிஸ்து இன்று உங்கள் ஜீவியத்திற்குள் பிரவேசித்தால் ஒரு குறைவே இல்லை இழந்து போனதை தேடுவார் காணாமல் போனது கிடைக்கும். லூக்கா 19:10 இழந்து போனதை, தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்.

நான் யார்? எங்கே போகிறோம்? எங்கிருந்து வந்தோம்? எனது நோக்கம் என்ன? ஆரம்பிப்பது எங்கிருந்து? நான் ஆரம்பித்த இடத்திலேயேலா இருக்கிறேன்? இல்லாவிட்டால் வழி நோக்கம் இலக்கு என்பவற்றை தவறிவிட்டேனா? மாறிவிட்டதா?

நினைத்து நிறைவேருமை இதினால் முழு வாழ்நாளும் இலக்கை தவறுதல். நான் உதவி செய்தவர்கள் என் முகத்துக்கு முன்பதாகவே உதறிதள்ளிவிடுகிறார்கள்.

**இதைத்தான் மனுஷறுக்கு காணமல் போயுள்ளது?**

லூக்கா 15 - ஆட்டிக்குட்டியானவருக்கு தாக்குதல் ஸ்திரீயின் திருமணத்திற்கான வெள்ளிக்காசு காணமல் போணமை தகப்பனுக் மகன் இல்லாமல் போனமை!

**எமக்கும் அநேகம் இழக்கப்பட்டுள்ளது. நீங்கள் இழந்தது என்ன?**

01. எமக்கு பெற்றோரது அரவணைப்பு இல்லாமல் போதல்.

02. பெற்றோரது தனிமையை இழத்தல்

03. நாம் வாழ வேண்டிய அதி உச்ச நிலையை நாம் இழந்து போதல்

04. சரீரத்தில், மனதில், குணாதிசியத்தில் சுகம் அற்ற நிலை

05. திருடனுக்கு அகப்பட்டு அநேகத்தை இழத்தல்

06. அழிவுக்கு அகப்படல்

07. வழி தவறி பாதை மாறி அழிவுக்குட்பட்ட நிலை

08. நித்தமும் நஷ்டம்

இந்த இரட்சகர் இழந்து போனதை பெற்றுத்தருவார் இது வரை நடந்தவற்றை சுகப்படுத்துவார் அவர் மேலும் அழிவில் இருந்து மீட்பார் நித்திய தண்டனையிலிருந்து நம்மை இரட்சிப்பார்.

லூக்கா 15:11:16, பின்னும் அவர் சொன்னது ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள் அவர்களின் இளையவன் தகப்பனை நோக்கி தகப்பனே ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கை எனக்கு தரவேண்டும் என்றார். அந்தப்படி அவன் அவர்களுக்குத் தன் ஆஸ்தியை பங்கிட்டு அந்தப்படி அவன் அவர்களுக்குத் தன் ஆஸ்தியை பங்கிட்டு கொடுத்தான்.

சில நாளைக்கு பின்பு இளையமான் எல்லாவற்றையும் சேர்த்துக் கொண்டு தூரத் தேசத்துக்கு புறப்பட்டுப் போய் அங்கே துன்மார்க்கமாய் ஜீவனம் பண்ணி தன் ஆஸ்தியை அழித்து போட்டான் எல்லாவற்றையும் அவன் செ0லவழித்த பின்பு அந்த தேசத்திலே கொடிய பஞ்சம் உண்டாயிற்று அப்பொழுது அவன் குறைவு படத்தொடங்கி அந்த தேசத்து குடிகளில் ஒருவனிடத்தில் போய் ஒட்டிக்கொண்டான். அந்தக் குடியனவன் அவனை தன் வயல்களில் பன்றிகளை மேய்கக்கும் படி அனுப்பினான் அப்பொழுது பன்றிகள் தின்கிற தவிட்டினால் தன் வயிறை நிரப்ப ஆசையாயிருந்தான் ஒருவனும் அதை அவனுக்கு கொடுக்கவில்லை.

கீழ்படியாத மகனுக்கு பாதைதவறிற்று நோக்கத்தை விட்டுவிட்டான் எனவே அவன் அதிக தூரம் போக நேரிட்டது. அழிவுக்குட்பட்டான் அநிதிக்குள் சென்றான். தேவ சட்டத்தை மீறினான். செய்யக கூடாததை செய்ய முட்பட்டான் தகப்பனின் ஒழுங்கை மீறினான் உன்னத இடத்திலிருந்து தாழ்வுக்குச் சென்றான். அவன் தன் தகப்பனின் பிள்ளை என்பதை மறந்து விட்டான் எனவே பன்றி தீவனத்தை சாப்பிட நேரிட்டது.

**மகன் திரும்பி வந்தாலும் ஏற்றுக்கொள்ளப்படுதலும்.**

அவனுக்கு புத்தி தெளிந்த போது அவன் என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்கு பூர்த்தியான சாப்பாடுஇருக்கிறது. நானே பசியினால் சாகிறேன். (லூக்கா. 15:18-21)

01. தேவன் செய்த நன்மை உங்களுக்கு ஞாபகம் உண்டா?

02. ஏன் நீங்கள் தேவனிடத்திலிருந்து தூரப் போனீர்கள்?

03. தூரம் போக வேண்டிய நிலை ஏற்பட்டதா? அப்படி ஏற்பட என்ன காரணம்?

**தகப்பன் என்னை ஏற்றுக்கொள்ளுதல்.**

01. எனது தற்கால பெறுமதி என்ன?

02. எந்த பெறுமதியும் இல்லை தகப்பனின் வீட்டில் கூட வேலை செய்து ஜீவிக்கும் நிலை.

லுக்கா 15:18 - 21 நான் எழுந்து என் தகப்பனிடத்தில் போய் தகப்பனே பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன். இனிமேல் உம்மடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல உம்முடைய கூலிக்காரனாக என்னை வைத்துக் கொள்ளும் என்று சொல்லி எழுந்து புறப்பட்டு தன் தகப்பனிடத்தில் வந்தான்.

01. தேவன் உங்களைக் குறித்து என்ன சித்திக்கிறார்.

02. மகனைப் போல் கவணிப்பாரா?

03. வேலைக் காரனைப் போல் கவணிப்பாரா?

04. அநேக வேலைகளை செய்த வேலைக்காரனைப் போல் கவணிப்பாரா?

**தூரத்தில் வருவதை தகப்பன் கண்டார்.**

லூக்கா 15:20 நீங்கள் எவ்வளவு தூரத்தில் இருந்த போதிலும் தெவன் உங்களை காண்பார்.

**பிதாவின் பிரதிபலிப்பு அவனை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.**

லூக்கா 15:22 - 4 அப்பொழுது தன் தகப்பன் ஊழியர்களை நோக்கி நீங்கள் உயர்ந்த வஸ்திரத்தை கொண்டு வந்து இவனுக்கு உடுத்தி இவன் கைக்கு மோதிரத்தையும் கால்களுக்கு பாரட்சைகளையும் போடுங்கள் கொழுத்த கன்றை கொண்டு வந்து அடியுங்கள் நாம் புசித்து சந்தோஷமாயிருப்போம். என் குமாரன் இவன் மரித்தான் திரும்பவும் காணப்பட்டான் அப்படியே அவர்கள் சந்தோஷப்படத் தொடங்கினார்கள்.

01. கட்டி அணைத்தார் வஸ்திரம் கொடுத்தார். மோதிரம் போட்டார் மிகுந்த சந்தோஷம்

02. மகன் காணமல் போனான் இப்போது காணப்பட்டான் எபிரேயர் 2:1-4

ஆகையால் நாம் கேட்டவர்களை விட்டு விலகி விடாதபடி அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய் கவணிக்க வேண்டும். ஏனெனில் தேவதூதர் மூலமாய் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான எந்தச் செய்கைக்கும் கீழ்படியாமைக்கு நீதியான தண்டனை வரத்தக்கதாக அவர்களுடைய வசனம் உறுதியாக்கப்படடிருக்க முதலாவது கர்த்தல் மூலமாய் அறிவிக்கப்பட்டு பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும். அடையாளங்களாலும் அற்புதங்களாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும் தம்முடைய சித்தத்தின்

படி பகிர்ந்து கொடுக்க பரிசுத்த ஆவியின் வரங்களினாலும் தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலைப்பற்றிருப்போமேயினால் தண்டனைக்கு எப்படி தப்பித்துக் கொள்வோம்.

01. ஏற்றுக்கொள்ளுதலின் பிரதிபலன் பெறுமதியானது

02. புறக்கணிப்பின் பிரதிபலிப்பு கொடுமையானது

03. கட்டியெழுப்புதலின் கிரயம் பெரிது

# மனிதனின் கோபமும் தேவனது ஈவும்

எல்லா மனுஷனுக்குள்ளும் எதிரிடையான சிந்தனைகள் உண்டு. எமது வாழ்வின் ஒரு சில அனுபவங்கள் மகிழ்ச்சிக்குரியது அவைகளின் ஞாபகம் இன்பமானது ஒரு சில அனுபவங்கள்வேதனைக்குரியது அவைகளை ஞாபகப்படுத்த முடியாதை ஞாபகத்தில் வரும் போது கோபம் உண்டாகிறது. வெறுப்புணர்வு சபிக்கதோன்றுகிறது. அப்போது நான் நினைக்கிறேன் வாழ்வில் எனக்கு அநீதி ஏற்பட்டுள்ளது என எப்போதும் என் வாழ்வில் தீமையே நேரிடுகிறது எல்லாரலும் எனக்கு தீமை எல்லாரும் என்னை எதிர்க்கின்றனர் எனக்குள் ஏற்பட்ட வெறுப்பினால் எனக்கு மற்றவர்களைக் குறித்தும் வெறுப்பே அதினால் எனக்கு என் வாழ்வில் பெரிதான தடை இதனால் நாம் மற்றவர்களை தாக்கமுற்படுகிறோம். சபிக்கிறோம். குறை சொல்கிறோம் கசப்பு ஏற்படுகிறது. லூக்கா 2:14 உன்னதத்தில் தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும் மனுறுமேல் பிரியமும் உண்டாவதாக.

உன்னதத்தில் மகிமை பூமியில் சமதானம் தேவனுக்கு பிரியமான மனுஷர் நிமிர்த்தம் பூமியிலெ சமதானம் உண்டாகும் நீங்கள் கோபத்தினால் தூரமாய் போய் தேனது ஈவுக்கு அந்நியரானால், கலகம் பிரச்சனை இவைகளால் மற்றவர்களது சமாதானமும் மகிழ்ச்சியும் இல்லாமல் போய்விடும்.

**வாழ்வில் நீங்கள் எப்படி பராமரிக்கப்பட்டீர்கள்?**

01. உங்கள் வாழ்வை குறித்து உங்களுக்கே வெறுப்புணர்வா?

02. எப்போதும் சுயவேதனையில் உள்ளீரா?

03. உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறாதபட்சத்தில் உங்கள் பெற்றோர் மீது வெறுப்புணர்வா?

04. அப்படியான சம்பவம் நடந்ததா?

**யாரைக் குறித்து உங்களுக்கு முதலில் வெறுப்பு உண்டானது? எப்போது?**

(உதாரணம்) காயின் பூமியில் எப்போதும் இடத்திற்கிடம் கஞ்சரித்தவன் ஆதி. 4:14
இஸ்ரவேல் :- அவனது கரம் எப்போது மற்றவர்களுக்கு எதிரானது ஆதி 16:12

எப்போதும் வாழ்வில் தீமை நமக்கு வருகிறது எல்லாரும் என்னை புறக்கணித்தனர் எல்லாரும் என்னை வெறுக்கின்றனர். நீங்களும் இப்படி நினைக்கிறீர்களா? அல்ல நீங்கள் நினைக்கீர்களா? உங்களுக்கு 100% விதமான திருப்தி என.

ஒரு சிலர் சொல்கின்றனர் என்னுடைய தகப்பன், மனைவி என்னை புறக்கணிக்கின்றனர் என, சிலர் அப்படி இல்லை என்பார்கள். உங்கள் வாழ்வின் நோக்கம் சிதைந்து போனதா? மகிழ்ச்சி இல்லாமல் போனதா? வழிகள் அடைக்கப்பட்ட உணர்வா? இதனால் யாரைக் குறித்தாவது வெறுப்பு உண்டா? உங்களுக்கு பெரிதான அநீதி இழைக்கப்பட்டதுண்டா?

எபேசி 2:1-5 அக்கிரமரத்தினாலும் பாவத்தினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்பித்தார். அவைகளில் நீஞ்கள்

முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும் கீழ்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகார பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்து கொண்டீர்கள் அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்சமும் மனசும்விரும்பினவைகளை செய்து சுபாவத்தினாலே மற்றவ்களைப் போல கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம் தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்பு கூர்ந்து தம்முடைய மிகுந்த அன்பினாலே அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மை கிறிஸ்துவுடனே கூட உயிர்பித்தார். கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்.

**உலகத்தில் மிகவும் அதிகமாய் துன்பப்பட்டவர் யார்?**

மனிதரால் மிகவும் தாழ்த்தப்பட்டு புறக்கணிக்கப்பட்டவர் யார்? இயேசு கிறிஸ்துவே அவர் எல்லா துன்பத்தையும் தன்மேல் சுமந்து கொண்டார். அவமானப்பட்டார். அவதியுற்றார். எபி.12:03 ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாத படிக்கு தமக்கு விரோதமாய் பாவிகளால் செய்யப்பட்ட விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்து கொள்ளுங்கள்.

நமக்காவே அவர் துன்பப்பட்டார் அவரை நோக்கி கண்களை ஏறெடுத்து பாருங்கள் அவரை தூஷித்தனர் தச்சனின் குமாரன் என்றனர், அவரின் கல்வியை புறக்கணித்தனர். படிப்பறியாதவராய் என அவருக்குறிய இடம் கொடுக்கப்படாமல்

அவருக்கு விரோதமாய் பொய்சாட்சி சொன்னார்கள் குற்றம் சாட்டினர் துப்பினார்கள்.

**இப்படி நமக்கு நேரிட்டால் நாம் என்ன செய்வோம்.**

நாம் மற்றவர்களுக்கு செய்வதையும் மற்றவர்கள் நமக்கு செய்வதையும் அவர் அனுபவித்தார். இது நமது குணாதிசியம் மாற்றவர்க்கு நாம் எதை செய்தோமோ அதை இயேசு சிலுவையில்

அனுபவித்தார். அவர் வாரினால் அடிக்கப்பட்டார். அது தான் நாம் மற்றவரைப் பற்றி பேசிய அவதூறு குற்றம் சாட்டல் பெற்றோரை துக்கப்படுத்தல் அர் வாரினால் அழக்கப்பட்டு நம்மை சுகமாக்கினார் இப்படிப்பட்ட துன்பம் நீங்கள் அணுபவிப்பதைப் பார்கிலும் மாற்றவருக்கு விரோமாய் நாம் செயற்பட்டுள்ளோம்.

எமது கிரியைகள் நிமிர்த்தம் தேவகோபாக்கினையை அதாவது ரோமர் 4:25 அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புகொடுக்கப்பட்டும் நாம் நீதிமானாக்கப்படுவதற்காக எழுதப்பட்டும் இருக்கிறார்.

அவர் நமது பாவங்களுக்காய் மரித்த போதிலும் நமக்கு நன்மை உண்டாக்கும் படி உயிர்த்தெழுந்தார். இந்த சூழ்நிலையிலேயே கோபாக்கினைக்கு பதிலாக தேவ ஈவு கிடைக்கப்பெற்றது. அவர் வந்தது துன்புற்ற வேதனைப்பட்ட நளிவுற்ற வாழ்வை சீர்படுத்தவே விடுவிக்கவே லூக்கா 4:18-19 கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிக்கிறார் தரித்திரருக்கு சுவிஷேத்தை பிரசங்கிக்கும் படி என்னை அபிஷேகம் பண்ணீர்கள் இருதயம் நருங்குண்டவர்களை குணமாக்கவும் சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையும், குருடருக்குப் பார்வையும் பிரசித்தப்படுத்தவும் நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும் கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும் என்னை அனுப்புறார்.

நமது ஜீவியத்தில் தேவனது சமாதானம் அதாவது சௌபாக்கியம் உண்டாக வேண்டும்.

நீங்கள் தேவனிடத்தில் கடந்து வரும் பட்சத்தில் உங்கள் வருமானம் குடும்பம் பிள்ளைகள் வீடுவாசல் அயலவர் மீது தேவனது தெய்வீக ஆசிர்வாதம் கடந்து வரும் நீங்கள் தேவனுக்கு பிரியமான பிள்ளையாவீர்கள்.

மத் 3:17 அன்றியும் வானதிலிருந்து ஒரு சத்தம் உண்டாகி இவர் என்னுடைய நேச குமாரன் இவரில் பிரியமாய் இருக்கிறேன் என்றார்.

இப்படியாக பரலோகத்திலிருந்து சத்தம் கேட்கும் நீ என்னுடைய நேசகுமாரன் என்பதை விட வேறு விஷேசித்த ஈவு வெரொன்றுமில்லை.